1110

1153

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

பாலர் தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

V. S. VENKATARAMAN & Co.,
Educational Publishers.
KUMBAKONAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR
MADRAS

பாலர் தமிழ் வாசகம்

மூன்றாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR 1937
MADRAS

பதிப்பாசிரியர் :

திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை,

தமிழ்விரிவுரையாளர்,

துரைத்தன மகமதியர் காலேஜ், சென்னை.

V. S. வெங்கடராமன் கம்பெனி,

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்.

பதிப்புரிமை] [விலை அணா 4

Reprinted 1936.

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS

PUBLISHERS' NOTE

This series of Balar Tamil Readers embody a new method in which nursery rhymes, nursery stories and cradle songs are made the main vehicle for reading, writing and conversation which are the three-fold aim of the study of the mother tongue in the lower classes. In following this psychological and active method, children's experiences at home, in school and in their immediate neighbourhood are the principal topics dealt with in the Readers of this series, and the vocabulary also is so selected that the words used are already familiar to the children, with the result that difficult words which are not within the ken of little boys and girls, which require elaborate explanation and which in consequence retard progress and fluency in reading are avoided with special care. Thus reading and writing are made easy and pleasant, and greater progress is made possible in each class. Another feature of these readers is that more of children's stories, dialogues and conversations are introduced which the pupils can act, and so develop a correct speech-feeling.

So far as the teaching of the mother tongue is concerned, elementary education up to Standard V may be said to comprise of three distinct stages. In Standard I the children are to be helped to identify the letters of the alphabet which are familiarised through pictures, simple words and short sentences. In Standards II and III which mark the second or the transition stage, the main aim is to help the pupils to surmount the mechanical difficulties in reading, writing and conversing so as to gain fluency. To facilitate this purpose, it is a sound principle that words of high frequency alone should first be introduced, and this is well kept in view in

these readers. To read as well as to write easy letters of communication is also one of the aims at this stage, and so practice in letter-writing is given copiously in this series.

When the pupils come to the third stage which covers Standards IV and V, they have attained a certain amount of fluency and mastery in reading and writing and they have now a wider outlook as their mental powers have developed further. Hence in these higher classes, the lessons and the vocabulary can go beyond the pupils' immediate experience. It is, therefore, possible at this stage to include topics extending beyond their home-lands to national and inter-national interests. Thus, Readers IV and V in this series are prepared so as to pave the way for creating a reading habit in the pupils so that when they grow up, they may read a vernacular daily, follow world events, and exercise their franchise properly which is defined by the Hartog Committee as the main purpose of elementary education.

This series of Tamil Readers thus stand for certain new principles and methods. It is hoped that these merits will commend themselves to the Headmasters and Managers of schools, and that these books will be widely introduced in their institutions.

We take this opportunity of tendering our sincere thanks to M. R. Ry. A. Kandaswami Pillai Avl., Lecturer in Tamil, Govt. Muhammadan College, Madras, for the great help he has rendered us in bringing out this series of Readers, and for being their editor.

V. S. VENKATARAMAN & CO.,

PUBLISHERS, KUMBAKONAM.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR 1937
MADRAS

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	சுந்தரமும் கமலமும்	7
2.	பாலன் பிறந்த நாள்	9
3.	பாப்பா தந்த முத்தம்	11
4.	பூனைக்குட்டி	12
5.	ஒலிக் குறிப்புக்கள்	14
6.	எங்கள் வீடு	15
7.	நிலாவோடு பேசுதல்	17
8.	சகோதர ஒற்றுமை	18
9.	பறவைகள்	20
10.	குரங்கும் குருவிகளும்	22
11.	எனது ஊர்	24
12.	பொம்மைக் கடை	27
13.	பாப்பா பாட்டு	30
14.	சுந்தரத்தின் நாய்	31
15.	பாடசாலை	33
16.	தவளைகளும் பிள்ளைகளும்	36
17.	பள்ளிக்கூடத் தோழர்கள்	37
18.	லீவுக் கடிதம்	40
19.	உழவுக்குப்பின், உணவுக்குமுன்	41

பாடம்	விஷயம்	பக்கம்
20.	வயல்கள்	45
21.	தமிழ்நாடு	48
22.	தேசிங்கு ராஜன்	49
23.	தேசிங்கு ராஜன் பாட்டு	51
24.	பார்த்து நட	53
25.	நல்ல பெண் காந்திமதி	56
26.	வண்ணாத்திப்பூச்சி	58
27.	வண்ணாத்திப்பூச்சி (பாட்டு)	61
28.	யாருக்கு வந்தனம்?	62
29.	தெனாலி ராமன்	64
30.	மாமரம்	67
31.	பூனைக்கு யார் மணி கட்டுவது?	70
32.	உசேன் ஆலியும் சுல்தானும்	72
33.	கடிகாரம்	75
34.	பூக்கள் விளையாட்டு	78
35.	கடிதம்—I	81
36.	கடிதம்—II	82
37.	புத்தர்	83
	செய்யுள்	87

பாலர் தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்



1. சுந்தரமும் கமலமும்

இந்தப் படத்தைப் பார்! இதில் சுந்தரமும், அவன் தங்கை கமலமும் நிற்கிறார்கள். இவர்களுடைய தாய் தந்தையர் இவர்களைச் செல்வமாக வளர்த்து வருகிறார்கள். இவர்கள், பெற்றோருக்கு அடங்கி அவர்கள் சொல்லுகிறபடி நடக்கிற நல்ல பிள்ளைகள்.

சுந்தரம் கூரிய அறிவு உள்ளவன். அவன் தைரியசாலி. தினமும் தனது அலுவல்களைச் சோம்பல் இல்லாமல் சுறு சுறுப்புடன்

தானே செய்துகொள்ளுவான். படிக்கும் போது கவனமாய்ப் பாடங்களைப் படிப்பான். அவனுக்கு ஓடி விளையாடுவதில் அதிகப் பிரியம். சுந்தரம் எப்பொழுதும் உண்மையே பேசுவான். எடுத்த காரியத்தை மனந் தளராமல் செய்து முடிப்பான். இவன் பிறர் பொருளுக்கு ஆசைப் படுவதில்லை. சுந்தரத்தை ஒரு சிறு வீரன் என்று சொல்லலாம்.

கமலம் ஒரு நல்ல பெண். அவள் அதி காலையில் எழுந்து, தனது தாய்க்கு உதவி செய் வாள்; பாத்திரம் பண்டங்களைச் சுத்தமாக விளக்கி வைப்பாள். அவளுக்குப் பாலன் என்ற ஒரு தம்பி உண்டு. அவன் கைக் குழந்தை. பாலனுக்கு அவள் விளையாட்டுக் காட்டுவாள்; தொட்டில் ஆட்டுவாள்; குழந் தைப் பாட்டுக்கள் பாடுவாள். கமலத்தின் தாயார் அவளுக்குத் தலையை வாரிப் பின்னி, பூச் சூட்டுவாள். கோலம் போடுவதிலும், தையல் வேலையிலும் கமலத்துக்கு அதிக ஆசை.

சுந்தரமும் கமலமும் எப்பொழுதும் தங்க ளுடைய உடலையும், உடையையும் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள்; சிரித்த முகத்துடன் எல்லோரிடத்திலும் மரியாதையாகப் பழகுவார் கள். எல்லோரும் இவர்களிடத்தில் பிரியமாய் இருப்பார்கள்.



2. பாலன் பிறந்த நாள்

பாலன் ஒரு சிறு குழந்தை. அவனுக்கு இப்பொழுது ஒரு வயது ஆகிறது. இன்றைய தினம் அவன் பிறந்த நாள். அவன் தாயும், தந்தையும் இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். வீட்டை மெழுகிக் கோலமிட்டு, வாசலில் மாவிலை கட்டி அலங்காரஞ் செய்தார்கள். இன்று சுந்தரமும், கமலமும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

காலையில் வீட்டில் கொட்டு மேளம் அடித்தது. ஊர்ப் பிள்ளைகள் எல்லோரும் வந்து கூடினார்கள். மாமன், மாமி, அத்தை, அத்தான் முதலிய உறவினர் வந்தார்கள். ஊரிலுள்ள பெரியோர்களும் வந்திருந்தார்கள். மத்தியானம் விருந்து நடந்தது. அதில் சாதம், கறி, பருப்பு, பலகாரம், பாயசம், பழங்கள் முதலியன படைத்தார்கள். எல்லோரும் உண்டு மகிழ்ந்தார்கள்.

சாப்பாட்டிற்குப் பிறகு குழந்தைக்குக் காது குத்தினார்கள். அப்போது பாலனுடைய மாமா ஒரு வெள்ளிக் கிண்ணமும், ஒரு பட்டுத் துண்டும் அவனுக்குக் கொடுத்தார். மற்றும் வந்தவர்கள் பட்டுச் சொக்காய், பட்டுக் குல்லாய், பல விதப் பொம்மைகள் இவைகளைக் கொடுத்தார்கள். பெற்றோர்கள் தங்கச் சங்கிலியும், தங்கக் காப்பும் செய்து குழந்தைக்குப் போட்டார்கள்.

மாலையில் ஊர் வலம் நடந்தது. குழந்தையை மோட்டார்வண்டியில் வைத்து, கொட்டு மேளத்துடன் ஊரைச் சுற்றி வந்தார்கள். எல்லோரும் குழந்தையை வாழ்த்திச் சென்றார்கள்.

கேள்விகள் :

1. பாலன் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு யார், யார் வந்திருந்தார்கள் ?
2. அவர்கள் பாலனுக்கு என்ன என்ன கொடுத்தார்கள் ?

3. பாப்பா தந்த முத்தம்

கதை கதையாம் காரணமாம்,

காரணத்தில் ஊருணியாம்,

ஊருணியில் புல் முளைத்ததாம்.

புல்லைக்கொண்டு மாட்டுக்குப் போட்டேன்.

மாடு எனக்குப் பால் தந்தது.

பாலைக் கொண்டுபோய்ப் பாட்டியிடம்
கொடுத்தேன்.

பாட்டி எனக்குச் செம்பு தந்தாள்.

செம்பைக் கொண்டுபோய்க் கிணற்றில்
இட்டேன்.

கிணறு எனக்கு நீர் தந்தது.

நீரை எடுத்துப் பூச்செடிக்கு விட்டேன்.

பூச்செடி எனக்குப் பூத் தந்தது.

பூவை எடுத்துப் பாப்பாவிடம் கொடுத்தேன்.

பாப்பா எனக்கு முத்தம் தந்தது.



4. பூனைக் குட்டி

இந்தப் பூனைக் குட்டியைக் கமலம் வளர்க்கிருள். இது வெள்ளை நிறமானது. இது கமலத்துடன் விளையாடும். இதை மடியில் வைத்து அவள் கொஞ்சுவாள். இது மியா, மியா என்று கத்தும். கமலம் இதற்குப் பாலும் சோறும் கொடுப்பாள். அது தானுக ஓடி எலிகளையும் பிடித்துத் தின்னும்.

பூனைக் குட்டியின் உடலின் அமைப்பைக் கவனி! அதன் உடல் முழுவதும் மிருதுவான மயிர் இருக்கிறது. அதன் தலை உருண்டையாகவும், வால் நீண்டும், கால்கள் குட்டையாகவும் இருக்கின்றன. பூனையின் கால்களில் கூரிய நகங்கள் உண்டு. அவைகளை வெளியே நீட்டவும் உள்ளே இழுத்துக்கொள்ளவும் பூனைக்கு முடியும்.

பூனைக் குட்டியின் முகத்தைப் பார்! அதன் முகத்தில் இரண்டு கண்களும், இரண்டு காதுகளும், மூக்கும், மீசையும், வாயும் இருக்கின்றன. பூனையின் கருவிழிகள் வெளிச்சத்தில் சுருங்கிக் கொள்ளும்; இருட்டில் அகலமாக விரியும். ஆதலால், பூனைக்கு இருட்டில் கண்கள் நன்றாய்த் தெரியும். அதன் பற்கள் கூர்மையானவை. எலிகளைப் பிடித்துத் தின்ன அவைகள் சாதகமாக இருக்கின்றன. பூனையின் நாக்குச் சொர சொரப்பாக இருக்கும்.

பூனைக் குட்டி, தனது உடலை நாக்கினால் நக்கிச் சுத்தமாக வைத்துக்கொள்ளும். அதற்கு எப்பொழுதும் அடுப்பண்டையிலும் வெயிலிலும் இருக்கப் பிரியம் அதிகம்.

சொல் பயிற்சி :

1. பெரியது—சிறியது
2. குட்டை—நெட்டை
3. மேடு—பள்ளம்
4. நீளம்—அகலம்
5. சுத்தம்—அசுத்தம்
6. இருட்டு—வெளிச்சம்
7. சொர சொரப்பு—வழ வழப்பு

கேள்விகள் :

1. பூனை தன் நகங்களை என்ன செய்ய முடியும்?
2. பூனைக்கு இரவில் கண் நன்றாய்த் தெரிவது எதனால்?
3. பூனைக்கு நாக்கும், பல்லும் எப்படி இருக்கின்றன?

5. ஒலிக் குறிப்புக்கள்

I. 1. தண்ணீர் குபீரென்று வெளி வந்தது.

2. காது கும்மென்று அடைத்தது.

3. பிள்ளைகள் கொல்லென்று சிரித்தார்கள்.

4. மூட்டையைத்தொப்பென்றுபோட்டான்.

II. 1. திடுதிடு என்று ஓடாதே.

2. சளசள என்று பேசாதே.

3. பல்லை நெறுநெறு என்று கடிக்காதே.

4. மார்பு படபட என்று அடித்தது.

5. பலகை வழவழப்பாய் இருக்கிறது.

III. 1. மனிதர்கள் கூட்டங் கூட்டமாக வந்தார்கள்.

2. ஆடுமாடுகள் மந்தை மந்தையாக மேயும்.

3. மாங்காய் குலை குலையாய்க் காய்த்தது.

4. பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்தன.

5. எறும்புகள் சாரை சாரையாய்ப் போகின்றன.

6. குழந்தை தேம்பித்தேம்பி அழுகிறது.

7. பிச்சைக்காரன் தெருத் தெருவாய்த் திரிகிறான்.

8. செடிகளை வரிசை வரிசையாக நடு.



6. எங்கள் வீடு

இது எங்கள் வீடு. இதில் நானும், என் பெற்றோர்களும், சகோதரர்களும் சேர்ந்து குடும்பமாக வசிக்கிறோம். இந்த வீடு எங்கள் சொந்த வீடு.

வெயிலுக்கும் மழைக்கும் தங்கியிருக்க நமக்கு வீடு அவசியமானது. நமது பொருள்களைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும் வீடு உபயோகப்படுகிறது. வீட்டில் நாம் விளையாடுகிறோம், படிக்கிறோம், சாப்பிடுகிறோம், தூங்குகிறோம். வீடு இல்லாவிட்டால் நாம் கஷ்டப்படுவோம் அல்லவா?

எங்கள் வீடு செங்கல்லால் கட்டப்பட்டு ஓடு மூடியது. வீட்டின் முன்பக்கத்தில் வாசற்படி

யும், திண்ணையும் இருக்கின்றன. உட்புறத்தில் ஒரு பெரிய முற்றமும், முற்றத்தைச் சுற்றித் தாழ்வாரங்களும் இருக்கின்றன. முன் தாழ் வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரிய அறைகள் உண்டு. ஒன்று படுக்கை அறை ; மற்றொன்று புதிதாக வருபவர்கள் தங்கும் அறை. பக்கத்துத் தாழ்வாரங்களை அடுத்து நீண்ட கூடங்களும், சமையல் அறையும், சாமான் அறையும் இருக்கின்றன.

வீட்டின் பின்புறத்தில் கிணறும், காய் கறித்தோட்டமும், மாட்டுக் கொட்டிலும் இருக் கின்றன. எங்கள் வீடு சுகாதாரத்துக்குப் பொருத்தமானது. அது மேடான இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. வெளிச்சமும், காற்றோட்டமும் வரப் பெரிய ஜன்னல்கள் வைக்கப் பட்டு இருக்கின்றன. அவைகளை நாங்கள் எப் பொழுதும் திறந்து வைப்போம்.

நாங்கள் சுகமாய் வாழும் பொருட்டு எங் கள் வீட்டையும், சுற்றுப் புறத்தையும் சுத்த மாகவே வைத்துக்கொள்ளுகிறோம். ஒவ்வொரு சாமானையும் வைக்க ஓர் இடம் உண்டு. அவை களை அந்தந்த இடத்திலேயே தவறாமல் வைப் போம். வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க நாங் கள் ஒவ்வொருவரும் பாடுபடுகிறோம்.

நமது நாட்டில் குடியிருக்கக் குடிசைகள் கூட இல்லாமல், பலர் அலைந்துதிரிந்து கஷ்டப் படுகிறார்கள். ஆதலால் வழிப்போக்கர்கள் வந்தால் நாங்கள், எங்கள் வீட்டில் தங்கிச் செல்ல இடங் கொடுப்போம்.

பயிற்சி:—கோடு இட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைத்து வாசி.

வீட்டின் முன்பக்கத்தில் —, —, இருக்கின்றன ; பின்புறத்தில்—, —, —இருக்கின்றன,

---

7. நிலாவோடு பேசுதல்

நிலா ! நிலா ! எங்கே போகிறாய் ? மலையாங்

குளத்துக்கு மண் எடுக்கப் போகிறேன்.

மண் என்னத்திற்கு ? சுவர் வைக்க.

சுவர் என்னத்திற்கு ? வீடு கட்ட.

வீடு என்னத்திற்கு ? குழந்தைகள் வளர.

குழந்தைகள் என்னத்திற்கு ?

தாழம் பாயிலே தவழ்ந்து விளையாட,
பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட,
கோரைப் பாயிலே குதித்து விளையாட,
ஓலைப் பாயிலே ஓடி விளையாட.

8. சகோதர ஒற்றுமை

முன்னொரு காலத்தில் திருதராஷ்டிரன், பாண்டு என இரண்டு அரசர்கள் இருந்தார்கள். இவர்கள் அண்ணன் தம்பிகள். தமையனாகிய திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலிய நூறு பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களுக்குக் கௌரவர் என்று பெயர். இவர்கள் மிகப் பொல்லாதவர்கள். பாண்டு மகாராஜாவுக்குத் தருமர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என ஐந்து பிள்ளைகள் உண்டு. இவர்களுக்குப் பாண்டவர் என்று பெயர் இவர்கள் நல்லவர்கள்.

துரியோதனன் முதலிய கௌரவர்கள் பல விதங்களில் பாண்டவர்களைத் தொந்தரவு செய்தார்கள். அவர்கள் பாண்டவர்களுடைய நாட்டைப் பிடுங்கிக்கொண்டு இவர்களைக் காட்டிற்குத் துரத்தி விட்டனர்; இவர்களைக் கொல்லவும் முயற்சி செய்தனர்.

ஒரு நாள் கொடிய துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும் ஒரு தோட்டத்தில் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தத் தோட்டம் வேறொரு இராஜாவிற்குச் சொந்தமானது. அந்த இராஜா இவர்களைப் பிடித்துச் சிறைசெய்து விட்டான். அப்

பொழுது அவர்கள் இட்ட கூக்குரல், அங்குக் காட்டில் தங்கியிருந்த தருமராஜாவின் காதில் விழுந்தது. உடனே அவர் தம்பிகளை அழைத்துத் தமது விரோதியான துரியோதனன் முதலியவர்களை விடுவிக்கக் கட்டளையிட்டார்.

தம்பிமார்கள் தருமரைப்பார்த்து, "நமக்குப் பல தீமைகள் செய்த விரோதிகளுக்கு இரக்கங் காட்டுவது நியாயமா?" என்றனர். அதற்குத் தருமர், "கௌரவர்களும் நாமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள். நமக்குள் ஏற்படும் சண்டைக்கு அவர்கள் நூறு பேரும், நாம் ஐந்துபேருமாகப் பிரிவோம். ஆனால் வெளி விரோதிகள் எதிர்க்க வந்தால் நாம் நூற்றைந்துபேராகச் சேர்வோம். மேலும், தீமை செய்தவருக்குக்கூட ஆபத்துக்காலத்தில் நன்மை செய்வதே நமது கடமை" என்று பதில் சொன்னார். அதைக் கேட்ட தம்பிகள் தருமரை வணங்கி, அவர் சொன்னபடியே சென்று கௌரவர்களை விடுவித்தார்கள்.

கேள்விகள் :

1. கௌரவர் யார்?
2. பாண்டவர் ஐவருடைய பெயர்களையும் சொல்.
3. கௌரவர்களுக்கு ஏன் தருமர் உதவி செய்யச் சொன்னார்?



9. பறவைகள்

ஆகாயத்தில் பறக்கும் காகம், கிளி முதலிய பிராணிகளுக்குப் பறவைகள் என்று பெயர். அவைகளைப் பட்சிகள் என்றும் சொல்வதுண்டு.

மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனிப்போம். மிருகங்களும் பட்சிகளும் உணவு உண்டு, நீர் குடித்து, தூங்கி, இளைப்பாறி உயிர்வாழ்கின்றன. என்றாலும், மிருகங்கள் நான்கு கால்களுடன் தரையில் நடமாடும்; பட்சிகள் இறக்கைகளின் உதவியால் ஆகாயத்தில் பறக்கும். மிருகங்களுக்குப் பற்கள் உண்டு. அவை குட்டிபோட்டுப் பால் கொடுக்கும். பறவைகளுக்கோ பற்கள் இல்லை; கடினமான அலகு அல்லது மூக்கு உண்டு. இவை

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் வளர்ந்து தாமே ஆகாரத்தைத் தேடிக்கொள் ளும் வரையில், தாய்ப் பறவைகள் இரையைக் கொண்டுவந்து அவைகளின் வாயில் கொடுக்கும்.

பல வகையான பறவைகளை நீங்கள் பார்த் திருப்பீர்கள். கோழி, வாத்து, கொக்கு, பருந்து, மயில் முதலிய பட்சிகள் பெரியவை; கிளி, புரு, மைனு, சிட்டுக்குருவி, குயில் இவை சிறியவை. சிறிய பட்சிகள் பொதுவாகக் குருவிகள் எனப்படும்.

பறவைகளால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. மயில், புரு இவைகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். குயில் முதலிய சில பறவை கள் இனிமையாகக் கூவும். கிளி, மைனு இவைகளை வீட்டில் வைதது்ப் பேசப் பழக்க லாம். செத்துக்கிடக்கும் எலி முதலிய ஜந்துக் களைக் காகம், கழுகு, ஆந்தை முதலான பட்சிகள் தின்று, துர் நாற்றம் வீசாமல் ஆகாயத்தைச் சுத்தம் செய்கின்றன.

கடவுளால் படைக்கப்பட்ட அற்ப ஜந்துக் களாகிய பறவைகளும் நமக்கு எவ்வளவோ நன்மை புரிகின்றன அல்லவா? பறவைக் கூடு களைக் கலைப்பதும் முட்டைகளைத் திருடுவதும் பாவம்.



10. குரங்கும் குருவிகளும்

ஒரு அரச மரத்தில் வசதியான கூடுகளைக் கட்டிக்கொண்டு சில குருவிகள் சுகமாக வசித்து வந்தன. ஒரு நாள் பெருங் காற்றடித்து, கனத்த மழை பெய்தது. அப்பொழுது தங்குவதற்கு இடமில்லாமல் ஒரு குரங்கு மழையில் இங்கு மங்கும் ஓடி நனைந்து, குளிர் தாங்கமுடியாமல், கடைசியாக அந்த அரச மரத்தின் அடியில் வந்து தங்கியது.

குரங்கு குளிரினால் கஷ்டப்படுவதைப் பார்த்த ஒரு பெரிய குருவி "ஐயா, குரங்காரே! நாங்கள் எங்களது சிறு மூக்கினால் புல், வைக் கோல், பஞ்சு இவைகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி வந்து, அழகிய கூடுகள் அமைத்துக்

கொண்டு வசிக்கிறேமே. மழையினலும் குளிரினலும் எங்களுக்கு ஒரு துன்பமும் எற்படவில்லையே. உமக்கு மனிதரைப்போலக் கைகளும், கால்களுங்கூட இருக்கின்றன. அப்படி யிருந்தும் நீர் என் ஒரு வீடு கட்டிக்கொண்டு சுகமாக வாழக் கூடாது? மழைக் காலம் வரும் என்பது உமக்குத் தெரியாதா?'' என்று கேட்டது.

அதைக்கேட்டதும் குரங்குக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது. உடனே "ஊசிவாயுள்ள குருவியே! நீயா எனக்குப் புத்தி சொல்லுகிறுய்? எனக்குக் கூடு கட்டத் தெரியாது. ஆனல், இந்தக் கூடுகளைப் பிய்த்து எறியத் தெரியும். இதோ பார்!'' என்று சொல்லிக்கொண்டே குருவிகளின் கூடுகளைப் பிய்த்து எறிந்துவிட்டது.

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானெரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்.
ஞானமும் கல்வியும் நயந்த நூல்களும்,
ஈனருக்கு உரைத்திடில் இடர் அது ஆகுமே!

வானரம்=குரங்கு. தூக்கணம்=ஒரு விதப் பறவை.

கேள்விகள் :

1. குருவிகள் எப்படிக் கூடுகள் கட்டுகின்றன?
2. குரங்குக்குக் குருவி என்ன புத்திமதி சொல்லிற்று?
3. குரங்கு என்ன பதில் சொன்னது?



11. எனது ஊர்

நான் பிறந்த ஊர் சுமார் ஐந்நூறு வீடுகள் உள்ள ஒரு பெரிய கிராமம். ஊருக்கு வடக்கில் ஒரு சிறு ஆறு ஓடுகிறது; தெற்கில் ரயில் பாதை ஒன்று இருக்கிறது.

கிராமத்தின் நடுவில் ஒரு பெரிய கோவில் உண்டு. அதைச் சுற்றிலும் நான்கு பெரிய ரத வீதிகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர, சிறு தெருக்களும், சந்துகளும் உண்டு. பெரிய தெருக்களில், அநேக வீடுகள் ஓட்டுக் கட்டடங்கள்; சில, மாடி வீடுகள். சிறு தெருக்களில் பல கூரை வீடுகளும், இடை யிடையே சில குடிசைகளும் இருக்கின்றன.

கிராமத்தில் அவரவர்கள் வீடுகளைத் தவிர, சில பொது இடங்களும் உண்டு. கிராமக் கோவில் ஒரு பொது இடம். கிராமத்து ஜனங்கள் எல்லோரும் கோவிலுக்குப் போவார்கள்; எல்லோரும் ஒற்றுமையாகத் திருவிழாக்கள் நடத்துவார்கள். பஜனை மடம், கிராமச் சாவடி, கிராமப் பள்ளிக்கூடம், தபாலாபீசு இவைகளும் பொது இடங்களே. வழிப்போக்கர்கள் வந்தால் அவர்கள் பஜனை மடம் அல்லது கிராமச் சாவடியில் தங்குவார்கள்.

கோவிலுக்கு எதிரில் ஒரு சிறு கடைத் தெரு உண்டு. அதில் பலசரக்குக் கடை, ஜவுளிக் கடை, பலகாரக் கடை முதலிய பல கடைகள் இருக்கின்றன. இவைகளில் கிராமத்தாருக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைக்கும்.

ஊரின் கிழக்கிலும், மேற்கிலும் பெரிய குளங்கள் இருக்கின்றன. ஒரு குளம் குடி தண்ணீர்க் குளம். இந்தக் குளத்தில் தாமரையும் அல்லியும் படர்ந்து பூத்திருக்கின்றன. இதில் குளிக்கவுங் கூடாது; துணிகள் தோய்க்கவுங் கூடாது. ஆடு மாடுகள் குளிப்பாட்டத் தனியாகச் சிறு குளங்கள் உண்டு. சில தெருக்களில் கைப்பிடிச் சுவர் கட்டிய பொதுக் கிணறுகளும் இருக்கின்றன. ஊரைச் சுற்றித் தோப்புக்களும், தோட்டங்களும், வயல்களும் இருக்கின்றன.

வரி வசூல் செய்யக் கிராம முனிசீப்பும்' நிலங்களை அளந்து கட்டிச் சாகுபடிக் கணக்குகள் தயாரிக்கக் கணக்கப்பிள்ளையும் கிராமத்தில் முக்கிய அதிகாரிகள் ஆவர். கொடுக்கல், வாங்கல் சம்பந்தமான சிறு வழக்குகளையும், சண்டை, களவு முதலிய சிறு குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்யக் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. கிராமச் சுகாதாரம் முதலிய பொதுநலக் காரியங்களைக் கவனிக்கப் பஞ்சாயத்து போர்டு என்னும் ஒரு சபையும் இருக்கிறது.

கிராம வாழ்க்கையே சுகமானது. கிராமத்தில் சுத்தமான காற்றும், நல்ல தண்ணீரும் உண்டு. தயிர், பால், காய்கறிகள் இவைகள் எல்லாம் மலிவாகக் கிடைக்கும். நான் பிறந்த ஊர் எனக்கு அருமையானது. நான் பெரியவனான பின்பு, என் ஊராருக்குப் பல நன்மைகள் செய்வேன்.

"ஊருடன் கூடி வாழ்."

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்."

கேள்விகள் :

1. கிராமத்திலுள்ள பொதுக் கூட்டங்கள் எவை?
2. கிராம வாழ்க்கை எவ்விதங்களில் நல்லது?

12. பொம்மைக் கடை

கமலம் :—இங்கே பொம்மைகள் அதிகமாக இருக்கின்றன. அம்மா! இது பொம்மைக் கடையா ?

தாயார் :—ஆம்; பொம்மைக் கடைதான். இப்பொழுது நமது ஊரில் திருவிழா அல்லவா? அதற்காகப் பல புதிய கடைகள் வந்திருக்கின்றன.

சுந்தரம் :—கமலத்துக்கும் எனக்கும் விளையாட்டுச் சாமான்கள் வாங்கித் தாருங்கள்.

கடைக்காரன் :—இதோ பாருங்கள்! பலவகை மரச் செப்புக்கள், வர்ணமிட்ட மண் பொம்மைகள், வழவழப்புள்ள பீங்கான் பொம்மை

கள், கண்ணுடிப் பொம்மைகள் இவைகள் இருக்கின்றன.

தாயார் :—இவைகள் பழைய நாள் பொம்மைகள். புது மாதிரியான விளையாட்டுக் கருவிகளைக் காட்டுங்கள்.

கடைக்காரன் ;—ரப்பரால் செய்த கிளி, பந்து, ஊதல், குழந்தைகள், மிருகங்கள் இருக்கின்றன ; பாருங்கள். அமுக்கினுல் இவைகள் குரல் கொடுக்கும்.

சுந்தரம் :—தகர ரயில்வண்டி, மோட்டார், கிலுகிலுப்பை, பம்பரம், ஆகாயக் கப்பல் இவைகள் பல வர்ணங்களில் இருக்கின்றன. எனக்கு ஒரு மோட்டார் வாங்கிக் கொடுங்கள், அம்மா !

கடைக்காரன் ;—இவைகளைத் திருகினுல் வேகமாக ஓடும். இதோ ஓட விடுகிறேன், பாருங்கள்.

கமலம் :—இதோ சில வாத்து, யானை, கிளி, குழந்தை முதலிய பொம்மைகள் இருக்கின்றனவே. இந்தக் குழந்தை நிஜக் குழந்தையைப் போல் விழித்துப் பார்க்கிறது. இது எனக்கு வேண்டும், அம்மா !

தாயார் :—இந்த மோட்டார், பொம்மைக் குழந்தை, ரப்பர்க் கிளி இவைகளின் விலை என்ன ?

கடைக்காரன் :—மலிவாகத் தருகிறேன். மூன்றுக்கும் இரண்டு ரூபாய் கொடுங்கள்.

தாயார் :—இதோ ! இரண்டு ரூபாய். இந்தப் பொம்மைகளைக் காகிதத்தில் சுற்றிக் கொடுங்கள்.

கடைக்காரன் :—இந்தப் பொம்மைக் குழந்தை ஒருவிதக் கற்பூர அரக்கினுல் செய்தது. நெருப்பில் காட்டினுல் எரிந்துவிடும். ஆகையால் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுங்கள்.

தாயார் :—நாங்கள் போய் வருகிறோம்.

சொல் விளக்கம் :

கற்பூர அரக்கைச் செலுலாய்டு என்றும் சொல்லுவார்கள்.

கேள்வி :

நீ பார்த்துள்ள சில மரப் பொம்மை, ரப்பர்ப் பொம்மை, தகரப் பொம்மை இவைகளின் பெயர்களைச் சொல்லு.



13. பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி யிழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

14. சுந்தரத்தின் நாய்

சுந்தரம், ஒரு உயர்ந்த சாதி நாயை அருமையாக வளர்த்து வந்தான். அதுவும் அவனிடம் விசுவாசமாக இருந்தது. அந்த நாய் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். சவுக்காரம் தேய்த்து அதைத் தினமும் சுந்தரம் குளிப்பாட்டுவான் ; வேளா வேளையில் அதற்குச் சோறு போடுவான் ; தான் தின்னும் பலகாரங்களையும் கொடுப்பான். கூப்பிட்ட இடமெல்லாம் அவன் பின்னோடு அது போய்வரும்.

சுந்தரம் அதற்குப் பல விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்திருந்தான். அவன் "டைகர்"

என்று அழைத்தால் உடனே அது அவனிடம் ஓடிவந்து, எழும்பி எழும்பிக் குதித்துத் தனது வாலை ஆட்டும். "சலாம் செய்" என்றால் தனது முன்னங் கால்களைத் தூக்கித் தனது முகத்தில் வைத்துக்கொண்டு, பின்னங் கால்களால் நிற்கும். குளக்கரையில் நின்றுகொண்டு ஒரு குச்சியை அவன் தண்ணீரில் விட்டெறிவான். உடனே அது தண்ணீரில் குதித்து நீந்திப்போய் அந்தக் குச்சியை வாயினால் எடுத்து வரும்.

ஒரு நாள் சுந்தரம் பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டான். அப்போது டைகரைக் கூப்பிட்டு வாயைத் திறக்கச் சொன்னான். தனது புத்தகப் பையின் கைப்பிடியை அதன் வாயில் கொடுத்தான். டைகர் அதைக் கௌவிப் பிடித்துக்கொண்டது. "வா, பாடசாலை போவோம்" என்று சொல்லி, சுந்தரம் முன்னே போனான். நாயும் அந்தப் பையை எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்து சென்றது. வழியில் இதைப் பார்த்த எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். பாடசாலைப் பிள்ளைகள் இந்த வேடிக்கையைப் பார்த்துச் சிரித்தார்கள்.

பாடசாலைக்கு வந்ததும் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு, டைகரைப் பார்த்து, "வீட்டுக்கு ஓடு" என்று சுந்தரம் சொன்னான். அது உடனே வீட்டிற்குத் திரும்பிவிட்டது.

நாய் எவ்வளவு அறிவுள்ள பிராணி!



15. பாடசாலை

இது எங்கள் பாடசாலை. எனது கிராமத்துப் பிள்ளைகளும், நானும் தினந்தோறும் வேளை தவராமல் ஒழுங்காகச் சென்று, இதில் படித்து வருகிரேம். இந்தப் பள்ளிக்கூடத்தில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. சுமார் ஐம்பது பெண்களும், நூறு பையன்களும் இங்குப் படித்து வருகிரேம்.

எங்கள் பாடசாலை நல்ல காற்ரேட்டமும், வெளிச்சமும் உள்ள ஒரு கல் கட்டடம். இதில் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனியாக ஒரு அறை உண்டு. இதன் முன்புறத்தில் ஒரு சிறு தோட்டமும், பின்புறத்தில் விளையாடுமிடமும் இருக்கின்றன. ஆசிரியர்களும் நாங்களும் கட்டடத்

தையும், சுற்றுப் புறத்தையும் எப்பொழுதும் கருத்துடன் சுத்தமாக வைத்து வருகிறோம். துண்டுக் காகிதங்கள் முதலிய குப்பைகளைக் கண்டவிடத்தில் போடாமல், ஒரு குப்பைக் கூடையில் போட்டு வருகிறோம். கண்ட இடங்களில் எச்சிலைத் துப்பாமலும், பாடசாலைக்கு அருகில் ஒருவித அசங்கியமும் செய்யாமலும் எச்சரிக்கையாக இருக்கிறோம்.

ஒவ்வொரு வகுப்பு அறையிலும் உபாத்தியாயருக்காக ஒரு மேஜையும், நாற்காலியும் இருக்கின்றன. அவர் பாடங்களை எழுதி விளக்கக் கரும்பலகை ஒன்று உண்டு. நாங்கள் பெஞ்சுகளில் உட்காருகிறோம். சுவரில் படங்கள் தொங்கவிடப்பட்டு, சில நீதி வாக்கியங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

உபாத்தியாயர் வகுப்புக்கு வந்ததும், நாங்கள் எழுந்து நிற்போம். அவர் எங்கள் ஒவ்வொருவரையும் கவனித்து விசாரிப்பார். சுத்தமாக உள்ளவர்களை எங்கள் ஆசிரியர் மெச்சிக்கொள்வார் ; அசுத்தமாக வருபவர்களைக் கண்டிப்பார்.

உபாத்தியாயர் எங்களுக்கு வாசிப்பு, எழுத்து, கணக்கு, கதைகள், பாட்டுகள், பொது அறிவு, சித்திரம், தேகாப்பியாசம்

முதலிய பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறார். நாங்கள் அவர் சொல்லுவதைக் கவனமாகப் படித்துத் தேர்ச்சி அடைகிறோம். அவர் எங்களிடம் அன்பாக இருக்கிறார்.

தோட்டத்தில் பல செடிகளை நாங்கள் வளர்த்து வருகிறோம். அவைகளுக்குத் தினமும் தண்ணீர் வார்த்து, களை பிடுங்குவதுடன், அவைகளின் வளர்ச்சியைக் கவனித்துக் குறிப்புக்கள் எழுதியும் வருகிறோம்.

பாடங்கள் முடிந்து, பள்ளிக்கூடம் விட்டதும், நானும் என் தோழர்களும் சந்தோஷமாக விளையாடுவோம். உபாத்தியாயர் புது விளையாட்டுக்களைச் சொல்லிக் கொடுப்பார்.

எனக்கும் கமலத்துக்கும் பள்ளிக்கூடம் போவதில் மிகுந்த ஆசை.

கேள்விகள் :

1. பள்ளிக்கூடத்தைச் சுத்தமாக வைக்க என்ன செய்யவேண்டும் ?
2. உங்கள் வகுப்பு அறையில் என்ன என்ன இருக்கின்றன ?
3. பாடசாலையில் என்ன என்ன பாடங்களைப் படிக்கிறீர்கள் ?

16. பிள்ளைகளும் தவளைகளும்

சில பிள்ளைகள் ஒரு குளக்கரையில் கூடிக் கற்களைத் தண்ணீர்மேல் சறுக்கியோடும்படி விட்டெறிந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். குளத்திலிருந்த தவளைகள் பயந்து கல்லுக்குத் தப்பும் பொருட்டு, தண்ணீரில் முழுகி ஒளிந்து கொள்ளப் பார்த்தன. ஆனால், ஒன்றன்பின் ஒன்றாய் அநேகம் கற்கள் மேலும் மேலும் வந்துகொண்டிருந்தன. அதனால், சில தவளைகள் கல்லடிபட்டுக் காயமடைந்தன; இரண்டொன்று இறந்தும் போயின.

அப்பொழுது அவைகளில் தைரியமுள்ள தவளை ஒன்று, தன் தலையைத் தண்ணீருக்குமேல் நீட்டிக்கொண்டு, "அன்பான பிள்ளைகளே! அறியாத் தன்மையால் என்ன கொடுமை செய்கிறீர்கள்! இந்தக் கல்லெறி விளையாட்டு உங்களுக்கு ஆனந்தம்; எங்களுக்கு ஆபத்து. இது அநியாயம் அல்லவா" என்றது.

அதைக்கேட்ட பிள்ளைகள், ஆலோசியாமல் தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்து, எடுத்த கற்களைக் கீழே போட்டுவிட்டார்கள். பிறருக்குக் கெடுதியில்லாத விளையாட்டுக்களையே நாம் விளையாடவேண்டும்.

"கோதாட் டொழி."

"பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்."

17. பள்ளிக்கூடத் தோழர்கள்

சுவாமிநாதன் :—மணி! நீ பெரியவன் ஆனதும் என்ன வேலை பார்க்க உனக்கு ஆசை?

மணி :—என் தகப்பனாரைப்போல் பயிர் வேலை பார்க்கத்தான்.

சுவாமிநாதன் :—பயிர்த் தொழில் மிகக் கடினமான வேலையல்லவா ?

மணி :—கடின வேலைதான். ஆனால் பிறருக்குக் கைகட்டிச் சேவிக்க வேண்டியதில்லையே ? மேலும் பயிர்த் தொழில் தான் நமது நாட்டுக்கு உயிர்த்தொழில். அதனால்தான் நமக்கு உணவு கிடைத்து நாம் ஜீவித்திருக்கிறோம். நீ என்ன தொழில் செய்யப் போகிறாய் ?

சுவாமிநாதன் :—தச்சு வேலையில் பழகி, நாற்காலி, மேஜை, பெட்டி, அலமாரி இவைகள் செய்ய எனக்கு ஆசை. ரத்தினம்! என்ன வேலை பார்க்க உனக்கு இஷ்டம்?

ரத்தினம் :—என் தகப்பனார் துணி நெய்கிறார். நானும் அதையே தான் செய்யப் போகிறேன். நமக்கு ஆடை அவசியமல்லவா ?

துரை ராஜ்! உனது விருப்பத்தைச் சொல்.

துரை ராஜ்:— நான் படித்து டாக்டராக வர எனக்கு ஆசை.

சுந்தரம்:—நான் படித்து வக்கிலாகப் போகிறேன்.

ரத்தினம் :—வக்கீலுக்கும், டாக்டருக்கும் படிக்க அதிகப் பணம் செலவாகுமே.

சுந்தரம்:—என் தகப்பனுர் அதற்கு வேண்டிய பணம் தருவதாகச் சொல்லி யிருக்கிருர். துரை ராஜ்! டாக்டர் வேலே அருவருப்பானது அல்லவா? எப்பொழுதும் நோயாளிகளுடன் பழகவேண்டுமே.

துரை ராஜ் :—வியாதியினுல் கஷ்டப்படுகிறவர்களுக்கு மருந்து கொடுத்துச் சுகப்படுத்துவது ஓர் மேலான தொழில். மேலும், நல்ல வரும்படி கிடைக்கும். மோட்டார் வண்டியும் வைத்துக்கொள்ளலாம். கோவிந்தா! உன் அபிப்பிராயம் என்ன?

கோவிந்தன் :—என் தகப்பனுர் என்னே வியாபாரத்தில் வைக்கப் போகிருர். வியாபாரத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். இதுவும் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமே!

வேலு :—நான் நமது நாட்டைக் காக்கும் சிப்பாய் ஆவேன்.

மணி :—அதுவும் நல்ல தொழிலே. கமலம்! படிக்கிருயே, உனது எண்ணம் என்ன ?

கமலம் :—நான் நன்ருய்ப் படித்த பிறகு உபாத்தியாயர் வேலே பார்க்க எனக்கு எண்ணம். பாலர்களே நல்வழிப் படுத்தி, அறிவு உண்டாக்குவது நல்லதல்லவா ? சிறு குழந்தைகளிடத்தில் பழக எனக்கு ஆசை அதிகம். வகுப்பில் முதலாக இருக்கிருயே, சுந்தரி ! உனக்கு என்ன விருப்பம்?

சுந்தரி :—படித்தால் உத்தியோகம் தான் பார்க்க வேண்டுமோ ? நான் வீட்டிலேயே இருந்து வீட்டு வேலேகளேச் சரிவரச் செய்வேன்.

உபாத்தியாயர்:—உங்களது சம்பாஷணே நன்ருக இருக்கிறது. நீங்கள் எந்த வேலேயைச் செய்தாலும்உண்மையுடன் உழைத்து நமது நாட்டுக்கு நலம் புரியவேண்டும்.

கேள்விகள் :

1. இந்தப் பாடத்தில் சொல்லியுள்ள தொழில்களின் பெயரை எழுது.
2. உபாத்தியாயர் சொல்லிய புத்திமதி என்ன ?

18. லீவுக் கடிதம்

டபீர் தெரு,
கும்பகோணம்.
16-6-1934.

ஐயா,

எனது தமக்கைக்கு நாளையதினம், எங்கள் வீட்டில் கல்யாணம். ஆதலால், இன்று முதல் ஒருவாரத்துக்குத் தயவு செய்து எனக்கு லீவு கொடுக்க வேண்டுகிறேன்.

இப்படி,
தங்கள் வணக்கமுள்ள
மாணாக்கன்,
தி. சுந்தரம்.

விலாசம்:—

உபாத்தியாயர் அவர்கள்,
3-வது வகுப்பு,
முனிசிபல் பாடசாலை,
கும்பகோணம்.

19. உழவுக்குப்பின், உணவுக்குமுன்

கதை கதையாம் காரணமாம்,
காரணத்தில் ஊர்ப் புறமாம்,
ஊர்ப்புறத்தில் ஒரு குப்பை மேடாம்,
குப்பை மேட்டில் கோழிக் குஞ்சுகளாம்.



கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு பெட்டைக்கோழியாம். பெட்டைக்கோழிகுப்பையைக் குப்பையைக் கிண்டிற்றும். அதிலிருந்து ஒரு நெல் மணி கிடைத்ததாம்.

பெட்டைக்கோழி மேலே அண்ணாந்து பார்த்து,



" குப்பை மேட்டில் கிடைத்த நெல்லைப்
புதைக்க வருவார் உண்டோ ?
விதைக்க வருவார் உண்டோ ?

என்று கத்திக் கத்திக் கூவிற்றும்.

காக்கை வந்து, " நான் மாட்டேன் " என்றது ;
கொக்கு வந்து, " நான் மாட்டேன் " என்றது ;
வாத்து வந்து, " நான் மாட்டேன் " என்றது.





பெட்டை உடனே நெல்
எடுத்து,
“ நல்ல வேளை ; நான்
இருக்கிறேன்.
என்தன் நெல்லை நான்
விதைக்கிறேன் ”
என்று சொல்லி விதைத்து விட்டதாம்.



விதைத்த உடனே நெல்
முளைத்தது.
கதிர் தோன்றி மணி
முதிர்ந்தது.
பெட்டைக்கோழி மேலே
அண்ணாந்து பார்த்து,
“விளைந்தநெல்லை அறுக்க
வருவார் உண்டோ ?
முதிர்ந்த நெலை அறுக்க வருவார் உண்டோ ?”
என்று கத்திக் கத்திக் கூவிற்றும்.

காக்கை வந்து, “நான் மாட்டேன்” என்றது ;
கொக்கு வந்து, “நான் மாட்டேன்” என்றது ;
வாத்து வந்து, “நான் மாட்டேன்” என்றது.



பெட்டை உடனே
தானெழுந்து,
“ நல்ல வேளை ; நான்
இருக்கிறேன்.
விளைந்த நெல்லை நான்
அறுக்கிறேன் ;
முதிர்ந்த நெல்லை நான்
அறுக்கிறேன்”
என்று சொல்லி அறுத்து விட்டதாம்.

அறுத்த நெல்லை அளந்து பார்க்க ஆறு மூட்டை நெல் இருந்தது. பெட்டைக்கோழி நெல்லைக் குத்திப் புடைத்து, அரிசியை உலைப் பானையிலே போட்டுவிட்டு மேலே அண்ணாந்து பார்த்து, "சாதம் சமைக்க வருவார் உண்டோ? சாதம் வடிக்க வருவார் உண்டோ?" என்று கத்திக் கத்திக் கூவிற்றும்.

காக்கை வந்து, "நான் மாட்டேன்" என்றது; கொக்கு வந்து, "நான் மாட்டேன்" என்றது; வாத்து வந்து, "நான் மாட்டேன்" என்றது.



பெட்டை உடனே
தானெழுந்து,
"நல்ல வேளை; நான்
இருக்கிறேன்.
உலைவைத்து நான் சமைக்
கிறேன்;
சமைத்த சோற்றை நான் வடிக்கிறேன்"
என்று சொல்லி நன்றாய்ச் சமைத்து வடித்ததாம்.



வடித்த சோற்றை வட்டத்
தட்டில் பரிமாறி,
"சமைத்த சோற்றைச் சாப்
பிட வருவாருண்டோ?
சமைத்த சோற்றைச் சாப்
பிட வருவாருண்டோ?"
என்று கத்திக் கத்திக் கூவிற்றும்.

காக்கை, “ நான் இருக்கிறேன் ” என்று வந்தது.
கொக்கு, “ நான் இருக்கிறேன்” என்று வந்தது.
வாத்து, “ நான் இருக்கிறேன்” என்று வந்தது.



பெட்டை உடனே தான் எழுந்து, “உழவுக்குப்பின், உணவுக்குமுன் என்பது போல, வேலை என்றால் விழுந்து கிடைக்கும் சோம்பேறிகளே! சோறு என்றால் வாய் திறந்து வருவீரோ? நல்ல வேளை; நான் இருக்கிறேன். நான் பெற்ற குஞ்சுகளே! நல்ல சோறு; வாருங்களேன்!! நாமெல்லோரும் சாப்பிடுவோம்”





என்று சொல்லிக் கோழிக்குஞ்சுகளும் பெட்டைக்கோழியும் சாப்பிட்டனவாம்.

கதை முடிந்தது: கத்தரிக்காய் காய்த்தது.



20. வயல்கள்

முருகன் என்னும் சிறுவன் தனது மாமன் வீட்டிற்குப் போயிருந்தான். அவனுடைய மாமா ஒரு பெரிய கிராமத்தில் வசித்துவந்தார். அவர் ஒரு நாள் முருகனை அழைத்துக்கொண்டு போய்த் தனது நிலங்களை அவனுக்குக் காட்டினார்.

இதோ பார் முருகா! இந்த ஊரைச் சுற்றித் தோட்டங்களும், தோப்புக்களும், வயல் களும் வெகு அழகாகவும், பசுமையாகவும் காண்கின்றன. இது நமது தோப்பு. இந்தத் தோப்பில் தென்னை, மா, புளி, இலுப்பை, பலா, நெல்லி முதலிய மரங்கள் உயரமாக வளர்ந் திருக்கின்றன. பல வருஷங்கள் வரை இந்த மரங்கள் பலன் கொடுக்கும்.

இது நமது தோட்டம். இதில் காய் கறிச் செடிகளையும், பூச்செடிகளையும் பயிர் செய்

கிறேம். இவைகளுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுகிறேம். உழுது, புழுதியில் விதைத்துத் தண்ணீர் இறைத்துப் பயிர் செய்யப்படும் நிலம் புன்செய் எனப் படும். புன்செய் நிலங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம், உளுந்து, துவரை, பயறு, மொச்சை, வேர்க் கடலை முதலிய தானியங்கள் பயிராகும்.

இந்த நெல் வயல்களைப் பார். ஆறு அல்லது ஏரியிலிருந்து வரும் வாய்க்கால் தண்ணீர் இவைகளுக்குப் பாயும். தண்ணீரைத் தேக்கி, சேற்றில் உழுது பயிர் செய்யும் நிலங்கள் நன்செய் எனப்படும். நன்செய்ப் பயிர்களில் முக்கியமானது நெல்.

கோடைக் காலத்தில் நன்செய் நிலங்களை ஆழமாக உழுது, காய விடுவார்கள். நிலத்தை உழ ஏர் அல்லது கலப்பையும், எருதுகளும் தேவை. ஆதலால், நமது வீட்டில் பல எருதுகளை வளர்ப்பதுடன், கலப்பைகள் வைத்திருப்பதையும் நீ பார்த்திருக்கலாம். ஆடி மாதத்தில் தண்ணீர் பாய்ச்சி, எருத் தழைகள் இட்டு, வயல்களை மறுபடியும் உழுது சேருக்கிப் பரம் படித்து நெல்லை விதைப்பார்கள். விதைகள் முளைத்துச் சிறு பயிர்களாகும். இவைகளுக்கு நாற்று என்று பெயர்.

நாற்றுக்களைப் பிடுங்கி, பண்படுத்திய வேறு வயல்களில் நடுவார்கள். பயிர் வளர்ந்து வரும்போது காலா காலங்களில் தண்ணீர் பாய்ச்சியும், களை பிடுங்கியும் பாதுகாத்து வருவார்கள். சுமார் நாலு மாதத்தில் பயிர்கள் பூத்துக் கதிர்கள் முற்றி, நெல் விளையும். அப்பொழுது பயிரை அறுத்து, கட்டுக்களாகக் கட்டிக் களத்தில் கொண்டுபோய், போர் அடித்து நெல்லையும் வைக்கோலையும் பிரிப் பார்கள். இந்த வயல்களிலிருந்துதான் நமது சாப்பாட்டுக்கான நெல் கிடைக்கிறது என்று மாமா முருகனுக்குச் சொன்னார்.

பாட்டு

வாய்க்கால் வெட்டி, வரப்பு வெட்டி
உரம் இட்டு, உழுது அடித்து
மரம் அடித்து, மண் இட்டு
விதை விதைத்து, நீர் பாய்ச்சி
காவல் காத்து, களை பிடுங்கி
நீர் உயர, நிலம் உயர
வரப்புயர, வளம் உயர
கதிர் உயர, தாள் சாய
அரிவாளும் தான் அரிய
போர் அடித்துப் பொதிகட்டி
களஞ்சியத்தில் இட்ட நெல்—
எங்கள் நெல்.

21. தமிழ் நாடு

நாம் பிறந்தது முதல் பேசிவருவது தமிழ்ப் பாஷை. பாஷையை மொழி என்றும் சொல்லலாம். தமிழ் நமக்குத் தாய்மொழி. அதில் திருத்தமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் பழகத்தான் நாம் இந்தப் பாலர் தமிழ் வாசகம் படிக்கிறோம். தமிழில் அநேக நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. பாலர்களே! நீங்கள் பெரியவர்களானதும் அவைகளைப் படித்தால் நல்ல அறிவு உண்டாகும்.

பிறந்தது முதல் நாம் தமிழைப் பேசுவதால் நாம் தமிழர்கள். பல ஊர்கள் உள்ள விசாலமான இடம் நாடு எனப்படும். தமிழர் வசிக்கும் நாடு, தமிழ்நாடு. நமது தமிழ் நாடு செழிக்க நாம் பாடுபட வேண்டும்.

பாட்டு

1. எங்கள் தெய்வத் தமிழ்நாடு—உலகு
   எங்கும் ஒளிசெய் தமிழ்நாடு
2. பங்கஜம் மலரும் தமிழ்நாடு—பல
   பங்க மில்காட்சித் தமிழ்நாடு
3. பொங்கும் கலைசேர் தமிழ்நாடு—இதைப்
   போற்றித் தினமும் மனம் நாடு.

பங்கஜம்—தாமரை. பங்கம்—குற்றம்.



22. தேசிங்கு ராஜன்

நமது தமிழ் நாட்டில் செஞ்சி என்று ஓர் ஊர் இருக்கிறது. அதில் முந்நூறு வருஷங்களுக்குமுன் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குத் தேசிங்கு என்ற ஒரு மகன் உண்டு. தகப்பனார் இறந்ததனால் தேசிங்கு சிறு வயதிலேயே ராஜாவானான். தேசிங்கு ராஜன் என்பது அவனுடைய முழுப் பெயர்.

தேசிங்கு ராஜனுக்குச் சிறு வயது முதற்கொண்டே பயம் என்பது தெரியாது. இளம் பருவத்திலேயே அவன் துணிச்சலாகப் பல வீரச் செயல்களைச் செய்து பெரும் புகழ் பெற்றான். குத்துச் சண்டையிலும், கத்திச்சண்டையிலும், குதிரை ஏறிச் சவாரி செய்வதிலும் தேசிங்கு மிக்க திறமையுள்ளவன்.

டில்லிப் பட்டணத்தில் அக்காலத்தில் ஒரு மகமதிய அரசர் இருந்தார். அவரிடம் நீல வேணி என்னும் பெயருள்ள ஒருபெரிய முரட்டுக் குதிரை இருந்தது. அதன்மேல் ஏறிச் சவாரி செய்ய எவருக்கும் முடியவில்லை. அந்தக் குதிரையை அடக்கிச் சவாரி செய்பவனுக்கு அதைக் கொடுப்பதாக டில்லி சுல்தான் தெரிவித்தார். இதைக் கேள்விப்பட்ட தேசிங்கு டில்லிக்குப் போய், அந்தக் குதிரைமேல் ஏறிச் சவாரி செய்ய வந்திருப்பதாகச் சுல்தானிடம் தெரிவித்தான். சுல்தான் அவனைப் பார்த்துச் சிரித்து, "நீயோ ஒரு சிறு பிள்ளை. எங்கள் பெரிய குதிரையின் அருகில் கூடப்போக முடியாது" என்று சொன்னார். சிறுவன் "குதிரையைக் கொண்டுவரச் சொல்லுங்கள், பார்க்கலாம்" என்றான். சுல்தான் உடனே நீலவேணியைக் கொண்டுவரக் கட்டளையிட்டார்.

குதிரை அவ்விடம் வந்ததும் ஒரு பெரிய கனைப்புக் கனைத்தது. அதைக் கேட்டு அங்குள்ளவர்கள் பயந்து நடுங்கினார்கள். ஆனால் தேசிங்கு அந்தப் பெரிய குதிரையின் பிடரி மயிரைத் தாவிப் பிடித்து, ஒரே பாய்ச்சலாய் அதன் முதுகின்மேல் ஏறிக்கொண்டான். அது எவ்வளவு வேகமாக ஓடியும் அவன் கீழே விழவில்லை. அதை அடக்கிப் பிடித்துப் பலதிசை

களிலும் துரத்தி யடித்தான். கடைசியில் அது களைத்துப்போய், அவனுக்கு அடங்கி நின்றது. அதைப் பார்த்த எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சுல்தான் தேசிங்கை மெச்சி, அந்தக் குதிரையை அவனுக்குக் கொடுத்தார். தேசிங்கு ராஜனும் ஊருக்குத் திரும்பி அரசாண்டு வந்தான்.

தேசிங்கு ராஜனால் கட்டப்பட்ட கோட்டைகளும், கோவில்களும் இப்போதும் வெகு அழகாக இருக்கின்றன. நீங்கள் பெரியவர்களானதும் அவைகளைப் போய்ப் பார்க்கலாம்.

---

23. தேசிங்கு ராஜன் பாட்டு

[தேசிங்கு ராஜனிடம், ஆற்காட்டு நவாப்பு அனுப்பிய தோன்றமல்லன் என்னும் தூதன் பணம் கேட்டபொழுது, தேசிங்கு வீரத்தன்மையுடன் பதில் சொன்னது.]

பல்லைப் படபட வென்று
கடித்தானையா ராஜா தேசிங்கு,
கையைத் தூக்கிக் கனைத்துத்
தட்டினான் ராஜா தேசிங்கு,

இனி யில்லாத கோபமாச்சுது
அந்த ராஜாவுக் கானாலும்
கோபத்தினாலே கட்டி யவனைக்
கொல்ல வெழுந்தானும்.

பார்த்தவுடனே தோன்றமல்லனும்
பதைத்து விழுந்தானும்,
விழுந்தவுடனே சலாஞ் செய்து
வேண்டிக் கொண்டானும்.

தலையை யசைத்துத் தோளை
நெறித்தான் ராஜா தேசிங்கு,
கண்களை யுருட்டிக் கதும்பினனையா
காளை சிங்கம்போலே,

" அடா! என்ன பேச்சுப் பேசினாயடா
தோன்ற மல்லண்ணா,
நீ வந்தாற்போல் நவாப்பு வந்தால்
நிமிஷமிருக்க மாட்டான்,
பணச் சேதி காதில் கேட்டால்
பாய்ந்து வெட்டிடுவேன்."

——



24. பார்த்து நட!

உபாத்தியாயர் :—பிள்ளைகளே ! இன்று நீங்கள் வரும் வழியில் ஜனங்கள் கும்பலாக நின்றார்களே ! கவனித்தீர்களா ?

இராமன் :—எல்லோரும் பார்த்தோம். ஒரு மோட்டார் விபத்து, ஐயா.

உபாத்தியாயர் ;—கிருஷ்ணா, நீ விசாரித்தாயா ? என்ன நேர்ந்தது ?

கிருஷ்ணன் ;—நானும் கூட்டத்திலிருந்து கவனித்தேன். மோட்டார் வண்டி ஒன்று வேகமாகச் சாலையில் வந்து கொண்டிருந்தது. அதைக் கவனிக்காமல் ரத்தினம் என்னும் பத்து வயதுப் பையன் திடீரென்று ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குக் குறுக்காகப் பாய்ந்தோடினான். மோட்டார் ஓட்டுபவன் மோட்டாரை நிறுத்த முடியாமையால், அது அந்தப் பையன் மீது ஏறிவிட்டது. பையன் கூச்சலிட்டு அழு

தான். ஜனங்கள் திடுக்கிட்டு ஓடிவந்தார்கள்.

உபாத்தியாயர்:—மாணிக்கம்! பிறகு என்ன நேர்ந்தது, தெரியுமா?

மாணிக்கம்:—எல்லோரும் மோட்டார் ஓட்டுபவனைக் குற்றஞ் சாட்டினார்கள். சிறுவர்கள் நடமாடும் தெருக்களில் வண்டியை மிகவும் வேகமாய் ஓட்டினது பிசகு என்று கோபித்தார்கள்.

உபாத்தியாயர்:—சரி; மோட்டார் ஓட்டுபவன் என்ன சொன்னான்?

மாணிக்கம்:—"ஊது கொம்பின் சத்தத்தைக் கவனிக்காமல் பையன் ஓடிவந்து மோட்டாரில் அகப்பட்டுக் கொண்டால், அது என் குற்றமாகுமா?" என்று சொன்னான்.

உபாத்தியாயர்:—இராமா! பிறகு என்ன நடந்தது?

இராமன்:—நல்லவேளையாய் உயிர்ச் சேதமில்லை. பையனுடைய காலில் மட்டும் சிறிது காயம் பட்டது. உடனே அந்த மோட்டாரிலேயே அவனை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றார்கள்.

உபாத்தியாயர்:—இன்று ஏற்பட்ட விபத்திலிருந்து நீங்கள் எல்லோரும் ஒரு பாடம்

அறிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் சைக்கிள், மோட்டார் முதலிய பல வகை வண்டிகள் தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் அடிக்கடி ஓடிக்கொண்டிருக்கின்றன. சிறிது அஜாக்கிரதையாக இருந்தால் நமது உயிருக்கே ஆபத்துவரும்; அல்லது கால் கை முறிந்து வாழ்நாள் முழுவதும் நாம் கஷ்டப்பட நேரிடும். பின்வரும் விதிகளை ஞாபகத்தில் வைத்து, அவைகளை நீங்கள் எப்பொழுதும் அநுசரிக்கவேண்டும்

1. வண்டிகள் இடது ஓரமாகவும், நாம் வலது ஓரமாகவும் சாலையில் போவதுதான் ஒழுங்கு.

2. தெருக்களில் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறம் குறுக்கே செல்லும்போது, முன் பின் பார்த்தே ஜாக்கிரதையாய்ப்போகவேண்டும்.

3. நடு ரோட்டிலும், நடுத் தெருவிலும் நின்று பேசக் கூடாது; விளையாடக் கூடாது.

பிள்ளைகள்:—இன்று பார்த்த விபத்தை நாங்கள் ஒருபொழுதும் மறக்க மாட்டோம். அது எங்களுக்கு ஒரு நல்ல எச்சரிக்கை.

25. நல்ல பெண் காந்திமதி

முன்னொரு காலத்தில் காந்திமதி என்ற ஒரு சிறு பெண் இருந்தாள். அவள் மிக்க அழகும் நல்ல குணமும் பொருந்தியவள். காந்திமதியின் அன்னை இறந்த பின் அவள் தந்தை மறு கலியாணம் செய்து கொண்டார். சிறிய தாயாருக்கு மூன்று பெண்கள் பிறந்து இருந்தனர். அவள் தன் பெண்களை அருமை பெருமையுடன் செல்வமாக வளர்த்து வந்தாள். சிற்றன்னை, காந்திமதிக்குப் பல வேலைகள் ஏவியும், நல்ல உடை, உணவு அளிக்காமலும் அவளைக் கஷ்டப்படுத்தினாள். காந்திமதி எல்லாவற்றையும் பொறுமையாகச் சகித்து வந்தாள்.

ஒரு நாள் காந்திமதி தன் இளைய சகோதரிகளுடன் குளத்திற்குச் சென்றாள். கரையில் தன் ஜோடுகளைக் கழற்றி வைத்துவிட்டு, குளத்தில் நீராடினாள். அப்பொழுது பருந்து ஒன்று பறந்து வந்து, அவளுடைய ஜோடுகளில் ஒன்றைத் தூக்கிச் சென்றது. காந்திமதி கரையேறினதும் தன் ஜோடு ஒன்றைக் காணமல் திகைத்து நின்றாள். பிறகு வீட்டிற்கு வந்ததும் இதை அறிந்த சிற்றன்னை அவளைக் கண்டித்தாள்.

அதே தினம் அந்த ஊர் அரசன் தனது மந்திரிகளுடன் அரண்மனை முற்றத்தில் உட்

கார்ந்து தனது கலியாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தான். அவன், "கடவுள் அருளால் கிடைக்கும் ஒரு பெண்ணையே நான் கலியாணம் செய்துகொள்ளுவேன்" என்று சொல்லி வாய் மூடுவதற்குள், அவன் காலடியில் ஓர் ஒற்றை ஜோடு தொப்பென்று விழுந்தது. அதைக் கண்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அரசன் "இது கடவுள் செயல். இந்த ஜோடு எந்தப் பெண்ணின் பாதத்துக்குப் பொருந்துகிறதோ, அந்தப் பெண்ணே எனக்கு மனைவியாவாள்" என்று சொன்னான்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. அந்தப் பட்டணத்திலிருந்த பல பெண்களும் வந்து ஒவ்வொருவராக அந்த ஜோட்டைப் போட்டுப் பார்த்தார்கள். அது ஒருவர் காலுக்கும் பொருந்தவில்லை. கடைசியாகக் காந்திமதி போட்டுப் பார்த்ததும், அது அவள் காலுக்குச் சரியாக இருந்தது. அவளது அழகையும், குணத்தையும் மெச்சி, அரசன் காந்திமதியைக் கலியாணம் செய்து கொண்டான். காந்திமதி ராணியான பிறகு தனது சிற்றன்னைக்கும், அவளுடைய மக்களுக்கும் வேண்டிய பொருள் கொடுத்து நன்மையே செய்து வந்தாள்.



26. வண்ணாத்திப் பூச்சி

பூஞ் செடிகளுக்கு அருகில் நான் அங்கும் இங்கும் பறந்து செல்வதைப் பாலர்களே, நீங்கள் பார்த்திருப்பீர்கள் ! பல வர்ணங்களுள்ள என் அழகைக் கண்டு, என்னைப் பிடித்து விளையாடவும் நீங்கள் ஆசைப்படுவதுண்டு. என் பெயர் என்ன தெரியுமா ? என்னை வண்ணாத்திப் பூச்சி என்று அழைப்பார்கள். நான் பிறந்து வளர்ந்த கதை மிகவும் அதிசயமானது. அதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆதலால், அதைச் சொல்லுகிறேன் ; கேளுங்கள்.

என் தாயாகிய வண்ணாத்திப் பூச்சி பறந்து வந்து ஒரு செடியினுடைய இலையின் அடிப் புறத்தில் நூற்றுக் கணக்கான சிறிய முட்டை களை இட்டாள். அந்த முட்டைகளில் ஒன்றாக முதலில் நான் இருந்தேன். பிறகு, சில நாட் களில் முட்டை வெடித்து ஒரு சிறு புழு ஆனேன். அப்பொழுது எனக்குப் பசி அதிகமாக இருந்ததால், அந்தச் செடியி லுள்ள பல இலைகளைத் தின்று கொண்டிருந் தேன்.

சில நாளில் என் உடல் பருத்து வளர்ந்து நான் கம்பளிப் பூச்சி ஆனேன். உடல் எல்லாம் மயிர் மூடியிருந்ததால் என்னை அப்பொழுது பார்க்க உங்களுக்கு எவ்வளவு அருவருப்பாக இருந்திருக்கும்! பின்பு எனது உடலிலிருந்து உண்டானஒருவகை நூலால் என்னைச் சுற்றி ஒரு கூடு அமைத்துக்கொண்டேன். அதில் பல நாட் கள் நல்ல தூக்கம் தூங்கினேன். அப்பொழுது என் உருவம் மாறிக்கொண்டே யிருந்து, கால் களும் இறகுகளும் முளைத்து வளர ஆரம் பித்தன. கடைசியில் கூடு வெடித்துப் பல நிற முள்ள அழகான வண்ணாத்திப் பூச்சியாக வெளி வந்தேன். எனது உருவ மாறுபாடுகளை நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள் என்றாலும், இதெல்லாம் உண்மையே.

இப்பொழுது பூக்கள் தோறும் சென்று, தேனை உறிஞ்சிக் குடித்து இனிமையாகக் காலங் கழித்து வருகிறேன். இன்னும் விரிவாகவும் என் கதையைச் சொல்லலாம். ஆனால் எனக்கு இப்பொழுது பசிக்கிறது. நான் தேன் குடிக்கப் போகவேண்டும். போகும் முன், பாலர்களே! உங்களை ஒன்றுமட்டும் வேண்டிக் கொள்கிறேன். என்னைப் போன்ற சிறு பூச்சிகளைப் பிடித்து, நீங்கள் விளையாடுவது சரியன்று. எங்களுக்கு அப்பொழுது பொறுக்க முடியாத நோவு உண்டாகிறது. ஆகையால், நீங்கள் அப்படிச் செய்யாமல் இருப்பீர்களாக!

கேள்விகள் :

1. வண்ணாத்திப் பூச்சி, தான் பூச்சி ஆவதற்கு முன் அடைந்த மாறுபாடுகளைச் சொல்.
2. வண்ணாத்திப் பூச்சி உங்களை என்ன வேண்டிக் கொண்டது?

---

27. வண்ணாத்திப் பூச்சி (பாட்டு)

1. சின்னச் சின்ன சிறு புழுவே !
சிறிய முட்டை தனில் பிறந்தாய்,
என்ன சொல்வேன் உன் பசியை ?
இலையை எல்லாம் தின்றாயே.

2. தின்றாய், கொழுத்தாய், திரண்டுருண்டாய்;
தின்ற மயக்கம் தீர்ந்துறங்க
நன்றாய் நூலை நூற்றதினால்
நல்ல கூடும் அமைத்தாயே.

3. சிறந்த கூட்டில் படுத்துறங்கிச்
சில நாள் செல்லச் சிறுவீட்டைத்
திறந்து வெளியே வந்தாயே ;
நிறம் சேர் சிறகை விரித்தாயே.

4. பறந்து பறந்து செடி தோறும்
பண்பாய் நடனம் செய்கின்றாய் ;
சிறந்த உன் பொன் உடைதன்னைச்
சிறக்க அசைத்துக் களிக்கின்றாய்.

5. உன்னைப் போல இன் தேனை
உண்டு வாழ ஆசை கொண்டேன் ;
உன்னைப் போன்ற பேரழகு
உலகில் எனக்கு வேண்டுவனே.

சொல் பயிற்சி :

திரண்டுருண்டாய் = திரண்டு உருண்டையானாய்.
பண்பாய் = நன்றாக.
இன் தேன் = இனிப்பான தேன்.
பேரழகு = பேர் அழகு = மிக்க அழகு.

28. யாருக்கு வந்தனம்?

சுந்தரம் ஒரு நாள் அயலூருக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தான். வெயில் அதிகமாக இருந்ததால் அவனுக்குத் தாக மெடுத்தது. வரும் வழியில் ஒரு சிறு ஆற்றைக் கண்டு, அதில் ஓடிய தெளிவான தண்ணீரைக் கைகளால் அள்ளிக் குடித்தான். தாகம் தணிந்ததும், அவன் மிக்க சந்தோஷத்துடன், “நதியே, நதியே! எனது தாகந் தணியத் தண்ணீர் அளித்த உனக்கு வந்தனம்” என்றான்.

நதி :—சிறுவனே! உனது வந்தனம் எனக்கு உரித்தானது அன்று. இந்தத் தண்ணீர் மலையிலிருந்து வருவதால், அந்த மலைக்கே நீ நன்றி செலுத்த வேண்டும்.

சுந்தரம் :—(தூரத்தில் காணப்பட்ட மலையைப் பார்த்து) எனது தாகந் தணியத் தண்ணீரளித்த நதியில் வெள்ளம் வரச் செய்த மலையே! உனக்கு மிக்க வந்தனம்.

மலை :—என்மேல் தவழும் மேகங்களே ஆற்றிலோடும் தண்ணீரை மழையாகப் பெய்தன. ஆதலால் அந்த மேகங்களுக்கே உனது வந்தனம் உரியதாகும்; எனக்கில்லை.

சுந்தரம் :—(மேகங்களை நோக்கி) எனது தாகந் தணியத் தண்ணீரளித்த நதியின் வெள்ளம்

வர, மலையில் மழை பெய்த மேகமே! உனக்கு வந்தனம்.

மேகம்:—உனது வந்தனம் எனக்குப் பொருந்தாது. சமுத்திரத்திலிருந்துதான் தண்ணீர் எனக்கு ஆவியாகக் கிடைத்தது. ஆகையால் நீ சமுத்திரத்திற்கே நன்றி பாராட்டு.

சுந்தரம்:—எனது தாகந் தணியத் தண்ணீரளித்த நதியில் வெள்ளம் வர, மலையில் மழை பெய்த மேகத்திற்கு நீராவி அளித்த சமுத்திரமே! உனக்கு வந்தனம்.

சமுத்திரம்:—சூரிய வெப்பத்தினுல்தான் என்னிடமுள்ள தண்ணீர் ஆவியாகிறது. ஆதலால், சூரியனுக்கே வந்தனம் செய்.

சுந்தரம்:—எனது தாகந்தணியத் தண்ணீரளித்த நதியில் வெள்ளம் வர, மலையில் மழைபெய்த மேகத்திற்குக் கடல் நீரை ஆவியாக்கிக் கொடுத்த சூரியனே! உமக்கு வந்தனம்.

சூரியன்:—எனக்கு நன்றி செலுத்துவதில் பிரயோஜனமில்லை. எல்லாம் வல்ல கடவுளே என்னையும், நீராவியையும், மேகத்தையும், மலையையும், நதியையும், தண்ணீரையும் உண்டாக்கினுர். நீ அவரையே வாழ்த்தி வந்தனஞ் செய்.

சுந்தரம் கடவுளை வாயார வாழ்த்திக் கொண்டு வீட்டுக்குச் சென்றுன்.

29. தெனாலி ராமன்

தெனாலி என்ற ஓர் ஊரில் ராமன் என்ற ஒருவன் இருந்தான். அவனைத் தெனாலி ராமன் என்று எல்லோரும் அழைப்பார்கள். அவன் வேடிக்கையாகப் பேசி எல்லாரையும் சிரிக்கச் செய்வதில் மிகக் கெட்டிக்காரன்.

தெனாலி ராமன் அந்த ஊர் அரசரிடஞ் சென்று தனது விகடப் பேச்சினால் அவரைச் சந்தோஷப்படுத்துவது வழக்கம். ராஜாவும் அவனுக்குப் பல பொருள்களை இனாமாகக் கொடுத்து ஆதரித்து வந்தார்.

ஒரு நாள் அரண்மனையில் உள்ள சர்க்கரை மூட்டையில் எறும்புகள் மொய்த்தன. ஆதலால் அந்தச் சர்க்கரையை வெயிலில் உலர்த்தியிருந்தார்கள். அப்பொழுது அங்கு வந்த தெனாலி ராமன் ராஜாவைப் பார்த்து, "மகாராஜாவே! இங்கு உலர்த்தியிருப்பது என்ன?" என்று ஒன்றும் அறியாதவன்போலக் கேட்டான். அதற்கு அவர், சர்க்கரை என்றால் அவன் தின்று விடுவான் என்று நினைத்து, "அது சீமை மண்" என்றார். தன்னை ஏமாற்ற எண்ணிய அரசருக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க ஆலோசித்துக்கொண்டு ராமன் தனது வீட்டுக்குத் திரும்பினான்.

வீட்டில் தெனுலிராமன் தன் மகனை அழைத்து, "நான் அரண்மனைக்குப் போய் அங்கு இருக்கிறேன். நீ சீக்கிரத்தில் ஓடி வந்து நமது கன்றுக் குட்டி இறந்து விட்டது என்று சொல்" என்ருன். பிறகு ராமன் மறுபடியும் ராஜாவிடம் வந்து விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் மகன் ஓடிவந்து, "ஐயோ! அப்பா! நமது கன்றுக் குட்டி இறந்துவிட்டது" என்று அலறினன். உடனே ராமன், "ஐயோ! அப்படியா? கன்று இறந்ததால் இனி நமது யாடு பால் தராது. இனி மேல் நாம் வாயில் மண்ணைத்தான் போட்டுக் கொள்ள வேண்டும். இதோ சீமை மண் இருக்கிறது. இங்கு வா. இந்த மண்ணை வாயில் போட்டுக் கொள்" என்று சொல்லித் தகப்பனும் மகனும் உலர்த்தியிருந்த சர்க் கரையை அள்ளி அள்ளித் தின்ருர்கள். விளை யாட்டாகச் சொன்னது வினையாக முடிந்ததைக் கண்ட அரசரும் ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

தெனுலி ராமன் அதோடு விடாமல் தன் மகனைப் பார்த்து, "கன்றுக் குட்டி செத்ததால் உன் தாயாருக்கும் இனிமேல் மண்தான். இந்த மண்ணை உனது துணியில் கட்டிக் கொண்டு

போய் அவள் வாயிலும் போடு'' என்று சொன்னான். மகனும் வேண்டிய அளவு சர்க்கரையைக் கட்டி யெடுத்துக்கொண்டு போய் விட்டான்.

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டு அங்கிருந்த எல்லோரும் ராமனின் வேடிக்கையான செய்கையைக் கண்டு உடல் குலுங்கச் சிரித்தார்கள். ராஜாவும் அவர்களோடு கூடச் சிரித்து ராமனது திறமையை மிகவும் மெச்சினார்.

சொல் பயிற்சி :

(i) தலை கீழாக வாசி :—

1. குடகு. 2. பாப்பா. 3. விகட கவி.
4. தேளு மீளுதே.

(ii) அரண் மனை = அரசர் வசிக்கும் வீடு.

கேள்விகள் :

1. ராமனுக்குத் தெனாலி ராமன் என்று எப்படிப் பெயர் வந்தது ?
2. அரசன் தெனாலி ராமனை எப்படி ஏமாற்றினான் ?
3. தெனாலி ராமன் அரசனை எப்படி ஏமாற்றினான் ?



30. மா மரம்

நமக்கு இனிப்பான பழங்கள் தரும் மரங்களில் மா மரம் முக்கியமானது. நமது கிராமங்களிலுள்ள தோப்புக்களிலும், சாலை ஓரங்களிலும், தோட்டங்களிலும் இதை வைத்து வளர்க்கிறார்கள்.

பரந்த கிளைகளும், அடர்ந்த இலைகளும் உடைய மா மரம் ஒரு குடையைப்போல அழகாகக் கவிந்து குளிர்ச்சியான நிழலைத் தருகிறது. இதன் இலைகள் பட்சியின் இறகுபோல் நீண்டு குறுகலாக இருக்கும். இவை பச்சை நிறமானவை. ஆனால் மாந் தளிர்கள் சிவப்பு நிறமாகப் பள பளவென்று, பார்க்க நேர்த்தியாகத் தொங்கும். முற்றிப் பழுத்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, உதிர்ந்துவிடும். மாவிலைகளைப் பல்

விளக்கவும், மாங் கொத்துக்களைக் கலியாணப் பந்தலில் கட்டவும் உபயோகிக்கிறார்கள்.

மாவின் அடிமரத்தைக் கரடுமுரடான பட்டைகள் மூடிக்கொண்டிருக்கும். இந்தப்பட்டைகள் மரத்துக்குச் சேதம் வராமல் காக்கின்றன. அடிமரத்தைப் பலகைகளாக அறுத்துப் பெட்டி, உட்காரும் பலகை முதலியன செய்யலாம்.

மா மரம் பூமிக்குள் வெகுதூரம்வரை ஆணி வேர்களையும், பக்கவேர்களையும் விட்டு வளர்கிறது. இந்த வேர்கள் மரத்தைக் கீழே விழாமல் நிலை நிறுத்துவதுடன், மரத்துக்கு வேண்டிய தண்ணீர், மர உணவு முதலியவற்றைப் பூமியிலிருந்து எடுத்துக் கொடுக்கின்றன.

மாசி, பங்குனி மாதங்களில் மா மரம் கொத்துக் கொத்தாய்ப் பூ பூக்கும். இந்தப் பூக்கள் மிகச் சிறியதாகவும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். பூக்களில் பிஞ்சுகள் குலைகுலையாக உண்டாகும். இவைகள் பருத்துக் காய்களாகிப் பிறகு கனிகளாகும். மாம் பிஞ்சுகளை மாவடு என்றும் சொல்லுவார்கள். மாவடுவும் மாங்காயும் ஊறுகாய்க்கு உதவும். மாவடு துவர்க்கும்; மாங்காய் புளிக்கும்; மாம்பழம் தித்திக்கும். மாங்காய்கள் பழுத்து மாம்பழங்

களாகும். இவைகள் சித்திரை முதல் ஆனி வரையில் கிடைக்கும். காதர், நீலன், மல் கோவா, ஒட்டு மாம்பழம் முதலிய உயர்ந்த சாதிப் பழங்கள் பருமஞகவும், நல்ல வாசனை யாகவும், உள்ளே நார் இல்லாமலும், கற்கண்டு போல் இனிப்பாகவும் இருக்கும்.

மாங் கொட்டைகளை க குழிகளில் ஊன்றித் தண்ணீர் வார்த்து வந்தால், அவை முளைத்துக் கன்றுகளாகும். அந்த மாங் கன்றுகளைப்பிடுங்கிப் பெரிய குழிகளில் நட்டு வளர்த்து வந்தால், அவை ஐந்தாறு வருஷங்களில் பெரிய மரங் களாகிக் காய்க்க ஆரம்பிக்கும். ஒட்டு மாங் கன்றுகள் என ஒருவகைக் கன்றுகள் உண்டு. இவை இரண்டு மூன்று வருஷத்திலேயே பலன் கொடுக்க ஆரம்பித்து விடும். மா மரங்கள் பொதுவாக ஐம்பது அறுபது வருஷங்களுக்கு அதிகமாக ஜீவித்திருந்து பலன் தரும்.

சொல் டபயிற்சி:

(i) மா+மரம்=மாமரம். மா+இலை=மாவிலை.
மா+வடு=மாவடு. மா+மழம்=மாம்பழம்.
மா+காய்=மாங்காய். மா+பூ=மாம்பூ.
மா+கன்று=மர்ங்கன்று. மா+செடி=மாஞ்செடி.

(ii) தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு உறைப்பு—இவை அறு சுவை எனப்படும்.



31. பூனைக்கு யார் மணி கட்டுவது ?

('பச்சைமலை பவழமலை' மெட்டு)

உலகிலுள்ள எலிகளெல்லாம்
ஓரிடத்தில் கூடி
பலவிதமாய்ப் பூனையினால்
படுந்துயரைக் கூறும்.

பருத்த உடல் சிறுத்த கண்ணன்
பழைய பெருச்சாளி
பரிவுடனே எழுந்து நின்று
பகர்ந்திடுதல் கேளும்.

"எண்ணி யொன்றை நம்மவர்கள்
ஏற்றபடி செய்தால்
மண்ணினிலே மடியாமல்
வாழ்ந்திடலாம் யாரும்."

அப்பொழுது அதிசூரன்
அவசரமாய் எழுந்து
"அறிந்துவிட்டேன் பூனை பயம்
அழிக்கவழி ஒன்றே:

பெரும்பூனை கழுத்தினிலே
பெரிய மணி ஒன்றைக்
கருங்கயிற்றால் கட்டிவிட்டால்
கலங்கிடுதல் வேண்டாம்.''

அங்கிருந்த எலிகளெல்லாம்
அதுவே சரியென்று
கொண்டுவந்தன துள்ளியோடி
கண்ட மணி ஒன்றை.

எங்கிருந்தோ வந்ததையா
எலிக் கிழடு ஒன்று
அங்கிருந்த எலிச் சபையை
அன்புடனே பார்த்து,

"பெரும் பூனை கழுத்தினிலே
பெரிய மணியெடுத்து
அருகில் நின்று கட்டவல்ல
அதிசூரன் யாரே ?''

எனக் கிழடு சொல்லும் முன்னம்
எங்கிருந்தோ பூனை
எழுந்துவர எலிகளெல்லாம்
எடுத்ததையா ஓட்டம்.

சொல் பயிற்சி :—

கூறும் = சொல்லும்
பகர்ந்திடுதல் = சொல்லுதல்
மடியாமல் = சாகாமல்
எலிக்கிழடு = கிழ எலி
பரிவுடனே = ஆசையுடனே
மண்ணிலே = பூமியிலே
அதி = மிக்க



32. உசேன் ஆலியும் சுல்தானும்

ஓர் ஊரில் உசேன் ஆலி, என்னும் பெயர் கொண்ட மகமதியர் ஒருவர் இருந்தார். அவர் தொண்டு கிழவர்; சிறு வயது முதல் பயிர் வேலையே செய்து ஜீவித்து வந்தார்.

தள்ளாத வயதில் உசேன் ஆலி ஒரு நாள் சில மாங்கன்றுகளைச் சாலை ஓரத்தில் நட்டு, மண் அணைத்து, தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, அந்த நாட்டு மகமதிய அரசராகிய சுல்தான், தமது குதிரையின் மேல் ஏறிக் கொண்டு மந்திரியுடன் அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். உசேன் மாங்கன்றுகள் நடுவதைக் கண்ட அவர், குதிரையை நிறுத்திக் கீழே இறங்கி, அந்தக் கிழவரைப் பார்த்து, "வயது முதிர்ந்த பெரியவரே! நீர் என்ன செய்கிறீர்?" என்று கேட்டார்.

ஆலி :—(சுல்தான் என்று அறியாமல்) இந்த மாங்கன்றுகளை நட்டுத் தண்ணீர் வார்க்கிறேன்.

சுல்தான் :—இந்தச் கன்றுகள் மரங்களாகிப் பழங்கள் தர எத்தனை நாளாகும்?

ஆலி :—சுமார் பத்து வருஷங்கள் ஆகும்.

சுல்தான் :—உமது வயது என்ன ?

ஆலி :—எழுபத்தைந்து.

சுல்தான் :—(சிரித்துக் கொண்டு) நன்ருக இருக்கிறது ! நீர் இன்னும் பத்து வருஷங்கள் உயிர் பிழைத்து இருந்து, இந்த மரங்களின் பழங்களைத் தின்னப் போகிறீரா? இது வீண் காரியமல்லவா ?

ஆலி :—அப்படி யல்ல. என் தகப்பனும் பாட்டனும் நட்டு வளர்த்த மரங்களின் பழங்களை நானும் என் குடும்பத்தாரும் தின்று வருகிரேம். அதுபோல எனது சந்ததியாருக்காகச் சில மரங்களை வளர்த்து வைப்பது எனது கடமை. நான் அப்படிச் செய்தால் தான் அவர்கள் சுகமாக வாழ முடியும்.

அந்தக் கிழவர் சொன்னதைக் கேட்டதும் சுல்தான் வெட்கமடைந்தார். உசேனை மெச்சி,

அவருக்கு நூறு ரூபாய் இனும் கொடுக்கும்படி மந்திரியிடம் தெரிவித்தார். மந்திரி கொடுத்த ரூபாயை வாங்கிக்கொண்ட ஆலி, தன் முன்னால் நிற்பவர் சுல்தான் அவர்களே என்று அறிந்து, அவரை வணங்கி, "மகாராஜாவே! இன்று நட்ட செடிகளின் பலன் பத்து வருஷங்களுக்குப் பிறகு எனது சந்ததியாருக்குத்தான் கிடைக்குமென்று நான் நினைத்தேன். ஆனால் இப்பொழுதே இந்தப் பணம் பலனாகக் கிடைத்தது" என்று சொல்லி அவரை வாழ்த்தினான்.

சுல்தானும், மந்திரியும் "நமது குடிகள் எல்லோரும் இந்த ஏழைக் கிழவரைப் போல் இருந்தால் எவ்வளவு நல்லது!" என்று பேசிக்கொண்டு தமது வழியே சென்றார்கள்.

கேள்விகள் :

1. உசேன் ஆலி மாங்கன்றுகளை நட்ட நோக்கம் என்ன ?
2. அதன் பலன் அப்பொழுதே எப்படிக் கிடைத்தது ?

33. கடிகாரம்

கமலம் :—நேரம் பார்த்துச் சொல்லுகிறார்களே ; அது எப்படி ? அப்பா !

தகப்பனார் :—கடிகாரத்தைப் பார்த்து நேரம் சொல்லலாம். இங்கு வந்து இந்தக் கடிகாரத்தைப் பார். நான் நேரம்பார்க்கச்சொல்லித் தருகிறேன். கடிகாரவட்டத்திலுள்ள எண்களைக் கவனி.



கமலம் :—1 முதல் 12 எண்கள் அதில் இருக்கின்றன.

தகப்பனார் :—அந்த எண்கள்தான் மணியைக் குறிக்கின்றன. கடிகாரத்தில் இரண்டு முள்ளுகள் சுற்றி வருவதைப் பார்.

கமலம் :—ஆமாம் ! ஒன்று பெரியது ; மற்றொன்று சிறியது.

தகப்பனார்:—சிறிய முள் மெதுவாக நகருகிறதல்லவா ? இந்த முள் ஓர் இலக்கத்திலிருந்து அடுத்த இலக்கத்திற்குச் செல்ல ஒருமணி நேரம் ஆகும். இந்த முள் மணியைக் காட்டுகிறது. இது மணி முள் எனப்படும்.

இது 3-ல் இருந்தால் மணி மூன்று ; 9-ல் இருந்தால் மணி ஒன்பது. இந்த மாதிரித் தான் பாக்கி மணிகளையும் கண்டறியலாம்.

கமலம் :—பெரிய முள் எதற்காக ? அப்பா !

தகப்பனர் :—அது நிமிஷங்களைக் காட்டும். அதற்கு நிமிஷ முள் என்று பெயர்.

கமலம் :—இது மணி முள்ளைவிட வேகமாகச் சுற்றுகிறதே !

தகப்பனர் :—கடிகாரத்தின் ஓரத்தைச் சுற்றி அறுபது சிறு கோடுகள் இருக்கின்றன ; கவனி. இந்த ஒவ்வொரு சிறு கோடும் ஒரு நிமிஷத்தைக் குறிக்கும். நிமிஷ முள் 12-ல் இருந்து எத்தனை சிறு கோடுகள் தாண்டி வந்திருக்கிறது என்று பார்த்து நிமிஷத் தைச் சொல்லலாம். நிமிஷ முள் 8-ல் இருந்தால் எத்தனை நிமிஷம் ?

கமலம்:—இரண்டு இலக்கங்களுக்கு இடையில் ஐந்து சிறு கோடுகள் இருப்பதால், எட்டை ஐந்தால் பெருக்க, 40 நிமிஷங்கள் ஆகும்.

தகப்பனர் :—சரி. மணி முள் 3-ல் இருக்கும் போது, நிமிஷ முள் 12-ல் இருக்கிறது. மணி முள் 3-லிருந்து 4-க்கு வருகிற ஒரு மணி நேரத்தில் நிமிஷ முள் 12-ல்

இருந்து 60 நிமிஷக்கோடுகளையும் தாண்டி 12-க்கு வருகிறது. ஆதலால் ஒரு மணிக்கு அறுபது நிமிஷங்கள்.

கமலம் :—கடிகாரத்துக்கு என் சாவி கொடுக்க வேண்டும் ?

தகப்பனார் :—அது நல்ல கேள்வி. இதோ பார் ! கடிகாரத்தைத் திறந்து காட்டுகிறேன்.

கமலம் :—சில வில் கம்பிச் சுருள்கள் அசைகின்றன ; சில சிறு சக்கரங்களும் சுற்றுகின்றன.

தகப்பனார் :—நான் சாவி கொடுக்கும்போது இந்தக் கம்பிச் சுருள்கள் முடுக்கப்பட்டுச் சுருங்கும் ; பிறகு கொஞ்சம் கொஞ்சமாக விரியும். அப்பொழுது, அவற்றோடு இணைக்கப்பட்ட சக்கரங்கள் சுழலும் ; கடிகார முட்களும் நகரும். இதுதான் கடிகார யந்திரத்தின் இரகசியம்.

கமலம் :—இப்பொழுது எல்லாம் விளங்கி விட்டது. எனக்கு ஒரு கைக் கடிகாரம் வாங்கித் தாருங்கள், அப்பா !

தகப்பனார் :—ஆகட்டும் ; நீ பெரிய பெண் ஆனதும் கையில் கட்டும் கடிகாரம் ஒன்று வாங்கித் தருகிறேன்.

34. பூக்கள் விளையாட்டு

(முத்திநெறி யறியாத என்ற வர்ணமெட்டு)

ஆற்றங்கரை ஓரத்திலே
அருகிலுள்ள தோட்டத்திலே
பூத்திருக்கும் பூவையெல்லாம்
போய்ப் பறிப்போம் நாமெல்லாம்.

இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு ஐந்து சிறுமிகள் ஒரு பூந்தோட்டத்திற்குள் போகிறார்கள். அங்கே முல்லை, மல்லிகை, தாமரை, அந்தி மந்தாரை, ரோஜா இந்தப் பூக்களில் பேருக்கு ஒருவிதப் பூவைப் பறித்துக்கொண்டு வந்து வரிசையாய் நிற்கிறார்கள். அவர்கள் முன் ஒரு சிறுவன் கையில் பூக்கூடையை வைத்துக்கொண்டு நிற்கிறான். அவன், எதிரில் நிற்கிற பெண்களின் பெயரைக் கேட்கிறான். அவர்கள் ஒவ்வொருவரும் தமது கையிலிருக்கும் பூவாகத் தம்மை நினைத்துக்கொண்டு பதில் சொல்லுகிறார்கள்.

சிறுவன் :— நீ யார் ?

முல்லைப் பூ :— நானா ?

(முத்திநெறி—மெட்டு)

முல்லை என்னும் பெய ருடையேன்
முடிவில் அழகும் நானுடையேன்
எல்லை இல்லா மணமுடையேன்
எங்கும் குலவுங் குணமுடையேன்.

சிறுவன் :— நீ யார் ?

மல்லிகைப் பூ :— நானா ?

(கும்மி—மெட்டு)

மன்னர் விரும்பும் உயர் வுடையேன்—நல்ல
மல்லிகை யென்னும் பெய ருடையேன்
உன்னும் அழகுடன் என்போலே—சொல்ல
உண்டோ ஒருவர் உலகினிலே.

சிறுவன் :— நீ யார் ?

தாமரைப் பூ :— நானா ?

(முத்திநெறி—மெட்டு)

கண்ணைக் கவரும் தாமரை நான்
கருத்துக்கினிய நன்மலர் நான்
விண்ணில் திரியும் சூரியனை
விரும்பி மலர்வேன் நாள்தோறும்.

சிறுவன் :— நீ யார் ?

அந்தி மந்தாரைப் பூ :— நானா ?

(கும்மி—மெட்டு)

அந்தி நேரத்தில் அலர்ந்திடுவேன்—வீசி
அடிக்கும் காற்றில் ஆடிடுவேன்
மந்தாரை யென்னும் பெயர் உடையேன்—நான்
மாந்தர் மகிழும் அழகுடையேன்.

சிறுவன் :— நீ யார் ?

ரோஜாப் பூ:— நானா ?

(முத்திநெறி—மெட்டு)

அழகும் மணமும் மிக வுடையேன்
அதிக விலைக்கே வந் தடைவேன்
மொழியும் ரோஜா என் பெயர்தான்
மோஹன ரோஜா என் பெயர்தான்.

சிறுவன் :—எங்கே யெல்லாம் வளருவீர்கள் ? என்ன தொழில் செய்வீர்கள் ?

பூக்கள் :—(ஐந்து பேரும் சேர்ந்து)

(முத்திநெறி—மெட்டு)

காட்டிலும் நாட்டிலும் மலர்ந்திடுவோம் ;
காற்றில் மணத்தைக் கலந்திடுவோம் ;
பாட்டினில் நாங்கள் அன்பு வைத்தே,
பாடும் ஈக்குத் தேன் அளிப்போம்.

சிறுவன் :—எங்கே வந்தீர்கள் ?

பூக்கள் :—

(கும்மி—மெட்டு)

இறைவன் படைத்தான், இங்குவந்தோம்—அந்த
இறைவன் அழைத்தால் ஏகிடுவோம்
எங்கள் வாழ்வு சிறிதேனினும்—நாங்கள்
எவர்க்கும் இன்பந் தருவோமே.

[எல்லோரும் செல்லுகிறார்கள்.]

35. கடிதம்—I
(பெரியோர்களுக்கு)

நலமே !

17, சித்திரை வீதி,
மதுரை,
12—9—1934.

தேவரீர் மாமா அவர்களுக்குத் தங்கள் அன்புள்ள நடராஜன் அநேக வணக்கம், இங்கு, யாவரும் சுகமே. அவ்விடத்திய நலத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நான் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டு இப்பொழுது மூன்றும் வகுப்பில் வாசிக்கிறேன். புதிய புத்தகங்கள் வாங்கிவிட்டேன். உபாத்தியாயர் அன்போடு பாடங்களைக் கற்பிக்கிருர். அங்குக் கோபாலன் சரிவரப் படித்து வருகிருஞ ?

வருகிற புரட்டாசி மாதத்தில் இங்குள்ள கோவிலில் நவராத்திரித் திருவிழா நடக்கப் போகிறது. அதற்கு மாமி, கோபாலன், குழந்தைகள் இவர்களுடன் தாங்கள் வர வேண்டுகின்றேன்.

தாங்கள் வரும்போது எனக்கு ஒரு பனியனும், குல்லாவும் வாங்கி வரவும் விவரமான மறுமொழி எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்புக்குரிய
நடராஜன்.

விலாசம் :—

திருவாளர் சுந்தர முதலியார் அவர்கள்,
பாண்டவர் மங்கலம்,
கோவில்பட்டி போஸ்டு.

36 கடிதம்—II

(இளையோர்களுக்கு)

பாண்டவர் மங்கலம்,
20—9—1954.

க்ஷேமம்.

அன்புடைய நடராஜனுக்கு அநேக ஆசீர்வாதம். அவ்விடத்திய க்ஷேமத்தை அறிய மிகவும் ஆசை.

உன்னுடைய கடிதம் வந்தது. நீ நன்றாகப் படித்து வருவதை அறிந்து மிகச் சந்தோஷிக்கிறேன். உனது பாட்டியார் முதலானவர்கள் உன்னைப் பார்க்க விரும்புகிறார்கள். நீ எழுதியபடி, திருவிழாவுக்கு நாங்கள் எல்லோரும் அங்கு வருகின்றோம். உன் தாய் தந்தையர்களுக்கு இதைச் சொல்லவும். வரும்பொழுது நீ விரும்பியபடி பனியனும், குல்லாவும் வாங்கி வருகிறோம்.

இவ் வருடத்தில் இங்கு நல்ல மழையே. ஏரி குளங்களில் தண்ணீர் நிரம்ப இருக்கிறது. சென்ற புதன்கிழமை நமது பசு, சேங்கன்று போட்டது. மான் குட்டிபோல் கன்று துள்ளித் துள்ளிக் குதிப்பதை நீ பார்த்தால் மிகவும் மகிழ்வாய். மற்றவை நேரில்.

உனது அன்புள்ள,
சுந்தர முதலியார்.

விலாசம் :—

சிரஞ்சீவி நடராஜன்,
17, சித்திரை வீதி,
மதுரை.

37. புத்தர்

புத்தர் என்பவர் ஒரு ராஜகுமாரர். அவர் தமது பூந்தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு தமக்குள் சொல்லிக் கொள்ளுகிறார்.

புத்தர் :—இது அழகான பூந் தோட்டம். இளங்காற்று அடிக்கிறது. உயர அண்ணாந்து பார்த்தால் நீல வானம் அழகாகக் காண்கிறது. தரையில் பசும் புல் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. செடிகள் பூத்து நல்ல வாசனை வீசுகின்றன. மரங்களில் இனிமையான காய் கனிகள் நிறைந்திருக்கின்றன. ஆகாயத்தில் பட்சிகள் உல்லாசமாய்ப் பறக்கின்றன. தாமரைக்குளத்தில் மீன்கள் கவலையின்றி நீந்துகின்றன. என்ன அழகு! என்ன அதிசயம்!

[அப்பொழுது அம்பு மார்பில் தைத்த புரு ஒன்று அச்சிறுவர் அருகில் பறந்து வந்து விழுந்தது.]

ஆகா! என்ன கொடுமை! இந்தப் பட்சி துடிக்கிறதே; கண்ணீர் விடுகிறதே. அம்பை மெதுவாக எடுக்க வேண்டும்.

[புருவைத் தனது மெல்லிய கையினால் பிடித்து அம்பை எடுக்கிறார்.]

ஓகோ! இரத்தம் பீறிட்டு வருகிறது. ஐயோ, பாவம்! இதற்கு மருந்து தடவ வேண்டும்.

[சில பச்சை இலைகளைக் கொண்டு வந்து சாறு பிழிந்து காயத்தில் தடவுகிறார். பறவை களைப்புத் தீர்கிறது. பிறகு சில தானியங்களை இரையாகக் கொண்டுவந்து அதற்குக் கொடுக் கிறார். புறா அவைகளைத் தின்கிறது.]

இந்த அம்பு என்னைக் குத்தினால் எப்படி யிருக்கும்? பார்க்கலாம்.

[தன் கையில் குத்திக்கொள்ளுகிறார்.]

வலி பொறுக்க முடியவில்லையே. என் கையில் பட்டதற்கே இவ்வளவு நோவு உண் டானால், அந்தச்சிறு பறவையின் மார்பில் அம்பு குத்தி வெளி வந்தால் எவ்வளவு துயரம் அதற்கு உண்டாயிருக்கும்? ஆகா!

[புத்தரது பெரிய தகப்பன் மகன் தேவ தத்தன் ஓடி வருகிறான்.]

தேவ தத்தன் :—தம்பி! நான் அம்பு எய்து இந்தப் புறாவை விழச் செய்தேன்; புறா வைக் கொடு.

புத்தர் :—நான் கொடுக்கமாட்டேன். எனக்கு அகப்பட்ட புறாவை நான் கொடுக்க முடி யாது.

தேவ தத்தன் :—நான் அம்பு விட்டு அதை அடிக்கா விட்டால் அது உனக்கு எப்படிக் கிடைத்திருக்கும்? நீ சொல்வது நியாய மில்லை. கொடுத்துவிடு.

புத்தர் :—நீ அதை வில்லால் அடித்ததே தவறு. நான் உன்னைக் கூரிய அம்பால் குத்தினுல் உனக்கு எப்படி யிருக்கும்? அதோ! ஒரு பெரியார் உட்கார்ந்திருக்கிருர். நியாயத்தை அவரிடம் கேட்போம் வா.

தேவ தத்தன் :—சரி.

(இருவரும் பெரியவரிடம் சென்று வணங்கி, வழக்கைத் தெரிவித்துக் கொள்ளுகிருர்கள்.)

தேவ தத்தன் :—நான் வேட்டையாடி விழச் செய்த புருவை இவன் எடுத்துக்கொண்டு தரமாட்டேன் என்கிருன். அதைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

புத்தர் :—இந்தப் புருவைப் புண் படுத்தி அதன் கூட்டத்திலிருந்துபிரித்து, அதைக்கொல்ல இவன் முயன்ருன். நான் அந்த அம்பை உருவி, மருந்து போட்டுத் தீனி கொடுத்தேன். அதனுல் அது பிழைத்திருக்கிறது. இது இப்பொழுது என்னுடையதுதான். அவனிடம் கொடுக்காமலிருக்க வேண்டுகிறேன். (என்று புருவை அந்த மகான் முன்பு வைத்தான்.)

சிஷ்யர்கள் :—தேவ தத்தன் செய்தது பாவம். உயிர் வதை செய்யக் கூடாது

பெரியார் :—தேவ தத்தா ! நீ இதைக் கொல்லப் பார்த்தாய். இது இறந்தால் இதன் உயிரை அளிக்க உன்னால் முடியுமா ?

தேவ தத்தன்:—முடியாது, சுவாமி.

பெரியார் :—தேவ தத்தா ! நீ இதைக் கொல்லப் பார்த்தாய். புத்தரோ இந்தப் புருவைக் காப்பாற்றினர். இது அவருக்கே உரியதாகும். புத்தரே! நீரே புருவை எடுத்துச் செல்லும்.

தேவ தத்தன் :—எனக்குப் புத்தி வந்தது. நானும் இனிமேல் எல்லாப் பிராணிகளிடத்திலும் பட்சமாயிருப்பேன்.

புத்தர் :—தன் இச்சைப்படி பறந்து திரியும் இப்புருவை நாம் பிடித்து வைத்திருக்கலாகாது.

[என்று சொல்லிப் புருவை ஆகாயத்தில் பறக்க விடுகிறார்.]

கேள்விகள் :

(i) கோடு இட்ட இடங்களில் சரியான சொற்கள் அமைத்து வாசி :

1. —வானம் அழகாகக்—
2. செடிகள்—நல்ல வாசனை—
3. இரத்தம்—வருகிறது.

(ii) புருவைப் புத்தரிடம் பெரியார் ஏன் கொடுத்தார் ?

ஔவையார் அருளிய

கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவு நன்று.
3. இல்லற மல்லது நல்லற மன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
7. ஏவா மக்கள் மூவா மருந்து.
8. ஐயம் புகினும் செய்வன செய்.
9. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
10. அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு.
11. கிட்டாதாயின் வெட்டென மற.
12. கீழோ ராயினுந் தாழவுரை.
13. கேட்டிலுறுதி கூட்டும் உடைமை.
14. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் [கல்வி.
15. சான்றோ ரென்கை ஈன்றோர்க்கழகு.
16. சீரைத்தேடின் ஏரைத் தேடு.
17. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.
18. சூதும் வாதும் வேதனை செய்யும்.
19. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.

20. தந்தை சொன் மிக்க மந்திர மில்லை.
21. தாய் சொல் துறந்தால் வாசகமில்லை.
22. திரைகட லோடியுந் திரவியந் தேடு.
23. தீராக் கோபம் போராய் முடியும்.
24. தேடா தழிக்கிற் பாடாய் முடியும்.
25. தையும் மாசியும் வையகத் துறங்கு.
26. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
27. நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.
28. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.
29. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
30. பாலோ டாயினுங் காலமறிந் துண்.
31. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.
32. பொல்லாங்கென்பவை எல்லாந் தவிர்.
33. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.
34. மாரி யல்லது காரிய மில்லை.
35. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
36. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
37. மூத்தோர் சொல்லும் வார்த்தை யமிர்தம்.
38. மேழிச் செல்வம் கோழை படாது.
39. வளவ னாயினும் அளவறிந் தழித் துண்.
40. வானஞ் சுருங்கில் தானஞ் சுருங்கும்.
41. ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு.

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.